# தென்மொழ



## மரத் தமிழன் !

பார்ப்பான் ஒருவன்; பழிவடவன்
மற்றொருவன்;
போர்ப்பண் இசைத்துப் புறம்நிற்க,
இங்கு,நீ
புத்தரிசி தெள்ளிப் புதுப்பால்
உலையேற்றிப்
புத்துருக்கு நெய்கலந்து, பொங்கியுண்பாய்
செந்தமிழா !
பொங்கல் நறுஞ்சுவையும், புத்துருக்கு
நெய்ச்சுவையும்
தங்குநின் வல்லடிமை தன்சுவைக்கே
ஈடாமோ ?
ஏடா ! தமிழனே ! என்னிதுகாண்
நின்பெருமை!
மாடா நீ? இல்லை; மரம் !

தி. பி. ௧௯௯௮. சுறவம் (தை)

ரூ0 காசு




''கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை'' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!


சுவடி–4 | தை தி. பி. ௧௯௯௮ (1967 சனவரி) | ஓலை–12


# கசப்பான சில உண்மைகள்!

———:o:———

இந்த ஆசிரியவுரை எழுதப்புகுமுன் கடந்த சில மாதங்களாக எழுதப் பெற்று வந்த ஆசிரியவுரைகள் பற்றி அன்பர்கள் விடுத்த மடல்கள் சிலவற்றில் கண்டுள்ள செய்திகளை ஒட்டிச் சில கூறுதல் தேவை என்று கருதுகின்றோம்.

தென்மொழியின் ஆசிரியவுரைகள் எவரையாவது மகிழவைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் எழுதப்பெறும் நகைச்சுவைத் தொடர்களோ, உள்ளக்களிப்பின் உணர்வுகளோ அல்ல. அதேபோல் எவரையாவது நோகவைக்க வேண்டும் என்ற நாட்டத்தில் எய்யப்பெறும் தொடர்கணைகளோ, உள்ளக்காழ்ப்பின் குமிழிகளோ அல்ல. உண்மையான – நடுநிலைமையான – மெய்யுணர்வோடு – கள்ளங் கவடின்றிக்– காலங்கருதி இடத்தாற் சொல்லப் பெறும் கருத்துரைகள். இந்தத்


பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்:– தங்கப்பா.
உரிமை, வெளியீடு: தாமரை, உலக முதல்வி.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1.

தமிழர் குமுகாயத்தின் பெருஞ்சுமைகள் அத்தனையும் வாரித் தலைமீது போட்டுக்கொண்டு, அவற்றின் சுமைதாளாமல் கதறும் நெஞ்ச ஓலங்கள்! உடல் நரம்பில் தெறித்தோடும் தமிழ்க் குருதியின் சூட்டில் கிளர்ந்தெழுந்த ஆவியின் ஒளிவடிவங்கள்! ஏறுநடையிட்ட நந்தமிழ்க் குமுகாயம், தன் வீறுகுன்றி மாறுபட்ட போக்கில், திக்குத்திசை தெரியாமல் போய்க் கொண்டிருக்கும் வேறுபாட்டைக் கண்டு, ஆறுதலுறாமல் அழுத கண்ணீர்த் திவலைகள். பொங்கிய பெருமூச்சுகள்! குமுறிய நெஞ்சப் பொருமல்கள்!

ஆனால் அத்தகைய நன்நோக்குடன், நடுநிலையோடு எழுதப் பெறும் அவை, தமிழர் ஒரு சிலர்க்குச் சினத்தை எழுப்புவானேன்? கொதிப்பைக் கொடுப்பானேன்? அவற்றால் தென்மொழி தேவையற்ற சில மறைமுகமான எதிர்ப்புகளை விளைவித்துக் கொள்வானேன்? நம் நண்பர்கள்–அன்பர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் சிலரும் நம்மைப் பகை நோக்காக நோக்கிப் புகைச்சல் அடைவானேன்? இவற்றில் தாம் சில கசப்பான உண்மைகள் அடங்கி இருக்கின்றன. எனவே அவர்தம் புகைச்சல்கள் எவை? அந்தக் கசப்பான உண்மைகள்தாம் எவை? என்பன பற்றிச் சில கூறுவோம்.

வடவர் புகுத்திடும் இந்தித் திணிப்பை முறியடிக்கத் தன் இடைத்துணியை வரிந்து கட்டிக்கொண்டு படையமைத்த தென்மொழி ஈண்டு அவ்விந்தியெதிர்ப்பு பற்றி ஏதும் பேசாமல்–மொழிநலம் பேணாமல் வழி தடுமாறுவதேன்? என்பதும், தென்மொழி உண்மையிலேயே தமிழ் நலத்தையும் தமிழர் நலத்தையும், தமிழ்நாட்டு விடுதலை நோக்கத்தையும் தன் உயிர் மூச்சாகக் கொண்டிருக்குமானால், அவற்றையே தன் முழு மூச்சாகவும், கொள்கையாகவும் கொண்டு இயங்கும் தமிழக எதிர்க்கட்சியான தி. மு. க., அவற்றிற்கெல்லாம் காரணமாகவிருக்கும் ஆளுங்கட்சியான பேராயக்கட்சியைத் தேர்தல் களத்தில் முகங்கண்டு நேருக்கு நேர் பொருதப்போகும் இந்நேரத்தில், அதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்காத கருத்துக்களைக் கூறிக் கொண்டிருப்பானேன் என்பதும், இவ்வாறான சில சூழல்களை உள்ளீடாக வைத்துப் பார்க்கையில் தென்மொழி இக்கால் ஆளுங்கட்சியாகவிருக்கும் பேராயக் கட்சியின் வலையுட்பட்டிருத்தல் வேண்டும் என்பதும் அன்பர்கள் எழுப்பிய உளப் புகைச்சல்கள்.

பேராயக்கட்சி என்பது என்ன என்று தென்மொழிக்குத் தெரியும். அதன் உறுப்பினர்களும் தலைவர்களும் யார் யார் என்றும் அவர்களின் தன்மைகள் எவை எவை என்றும் தென்மொழிக்குத் தெரியும். நமக்கு இவ்வாறு வெளிப்படையாகத் தெரியும் விளக்கங்களுக்கு அடியூட்டமாக நின்று அக்கட்சியையும் அதன் முகத்தையும் தக்கவாறு திசைதிருப்பி ஆட்டிப்படைப்பதும் யார் யார் என்பதையும் தென்மொழி அறியும். இன்னும் விளக்கமாகச் சொன்னால் பேராயக்கட்சியென்னுந் தொடர் வண்டியில் பயணச் சீட்டின்றி ஏறிப்போகும் திருடர்களையும், பையடிக்காரர்களையும், அதன் முதலிரண்டு வகுப்புகளில் ஏறிப் படுத்துக் கவலையின்றித் தூங்கிக்கொண்டு போகும் பெரியதனக்காரர்களையும், அவர்களின் கொழுத்த நலங்கள் எனப்படுபவை எவரெவரின் குருதிக்கட்டிகள், குலையீரல்கள், உழைப்பின் தேக்கங்கள் என்பதையும் தென்மொழி நன்கு உணரும். இன்னுஞ் சொன்னால் பேராயக்கட்சி யென்பது கொள்ளையர்களும் கொலைஞர்களும் ஒதுங்கிக் கிடக்கும் பாட்டு மடம் என்றும், அங்கிருப்பவர்களில் பெரும்பாலோர் தூக்கிலிடப்பட வேண்டியவர்கள் என்பதும், சிலர் நாடு கடத்தப்பட வேண்டியவர் என்பதும் தென்மொழிக்குத் தெளிவாகத் தெரியும். கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் ஒவ்வொரு கட்சியிலும் இத்தகைய நிலைகளே நீக்கமற நிறைந்திருப்பதையும் தென்மொழி அறியும். ஆனால் இத்தனையும் தெரிந்துதான் தென்மொழி தன் அரசியல் கருத்துகளைத் தெளிவாக உரைக்க முன் வந்துள்ளது. அதற்குக் காரணம் அத்தகைய பேராயக் கட்சிக் கட்டுமரத்தில்தான் நாம் ஏறிப் பயணம் போகவேண்டிய போகூழில் நம்மை நாம் அமர்த்திக் கொண்டிருக்கின்றோம். இந்நிலையில் நாம் நமக்கென்று ஒரு சிறிய படகையாவது செய்து கொண்டாலன்றி, நாம் அக்கட்டுமரத்தினின்று இறங்கி வெளிவருவதும், அல்லது அக்கட்டுமரத்தின் ஒரு பகுதி மரத்தில் ஒட்டிக்கொண்டிருப்பதே போதுமானதென்பதும் நமக்கு நாமே தீங்கை வருவித்துக் கொள்வனவாகும் என்பதைத்தான் நாம் கடந்த ஆசிரிய வுரைகளில் மறைமுகமாகக் குறிப்பிட்டிருந்தோம். இக்கால் வெளிப்படையாகவே சில கூற விரும்புகின்றோம். அவைதாம் இங்குள்ளோர் சிலர்க்குக் கசப்பான சில உண்மைகளாகும்.

தென்மொழியின் முழுமூச்சே நம்பண்டைத்திருமொழியாம் செந்தமிழை அதற்குத் தக்க ஓர் உயர்நிலையில் நிலை நிறுத்துவதும், நமக்கென்று பண்பட்ட செப்பமான ஓர் அரசை அமைத்துக் கொள்வதுமாகும். எத்

தனை ஆயிரம் அரசியல் சூழ்நிலைகள் வரினும் நாம் இந்த அடிப்படை யான கொள்கையிலிருந்து விடுபடப் போவதில்லை. விடுபடவும் இயலாது. எனவே அவ்வடிப்படையை மனத்திற்கொண்டுதான், இக்கால அரசியல் நிலையில் நாம் சிலவற்றைக் கூறி வருகின்றோம். அவற்றில் ஒன்றுதான் தமிழர்- இப்பொழுது எடுத்து வைத்துள்ள அடி சரியானதாக இல்லை என்ற உண்மையுமாகும். ஏனெனில் நாம் எந்த ஆட்சியினை எதிர்த்து அதினின்று விடுபட விரும்புகின்றோமோ, அது போன்ற ஓர் ஆட்சியமைப்பையே மீண்டும் அமைத்துக் கொள்ளத் துடியாய்த் துடிக்கின்றோம். எந்தக் கட்டுமரத்திலிருந்து விடுபட விரும்புகின்றோமோ, அதுபோலவே வலிவற்றதும், புரையோடியதுமான ஒரு கட்டுமரத்திலேயே நாம் ஏற முற்பட்டு விடுதல் கூடாது என்பதே தென்மொழியின் எச்சரிக்கை. நம்முடைய தேவைக்கும் விரைவுக்கும் கைக்குக் கிடைத்த எதையாவது ஒன்றைப் பற்றிக் கொள்ளும் நிலையில் நாம் இருக்கக் கூடாது நாம் ஏறப்போகும்- விடுதலை பெறப்போகும் நம் ஆட்சி, நாம் இருக்கின்ற ஒன்றுபோல் அல்லாமல் அதனினும் வேறுபட்ட அமைப்பும் வலிவும் கட்டுக்கோப்பும் உடைய ஒன்றாக இருத்தல் வேண்டும் என்பதே நம் விருப்பம். நாம்கூட்டிய அமைப்பு என்பதாலேயே நம்முடையது நல்ல அமைப்பு என்ற போக்கில் அரசியலை நாம் அணுகினால், அது நம்மை இன்னும் கீழ்நிலைக்குத்தான் கொண்டுசேர்க்கும் என்பது நம் எண்ணம். நாம் எந்த அளவில் பிறரைக் குறை கூறுகின்றோமோ, அந்த அளவில் நம்மைப் பார்த்துப் பிறர் குறை கூறிக் கொண்டிருக்கும்படியான நிலைக்கு நம்மை உட்படுத்திக் கொள்ளக் கூடாது. நாம ஏறியிருக்கின்ற வண்டியிலிருந்து இறங்குமுன் நாம் எந்த வண்டியில் ஏறப் போகின்றோம், அவ்வண்டி நம்மை எங்குக்கொண்டுபோய்ச்சேர்க்கும் என்பதில் நமக்கு நல்ல நம்பிக்கை இருத்தல் வேண்டும் என்பதே நாம் சொல்லிவருவது. இதை வேறு வகையாகச் சொன்னால் நமக்கு நம்பிக்கை ஏற்படும்படியான அளவிற்கு நம்மை ஒப்புக்கொள்ளச் செய்யும் ஒரு பயணத்திற்கே நம்மை நாம் அணியமாக்கிக் கொள்ளுதல் வேண்டும். இவ்வுண்மையை நாம் நன்கு விளங்கிக் கொள்வோமானால் பேராயக்கட்சியை வெட்டி வீழ்த்தி விடுவதாக முனைப்புக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சியான தி. மு. க வின் அமைப்பில் நமக்கு நம்பிக்கை ஊட்டாத பகுதி என்ன என்றும், அதிலுள்ள குறைபாடுகள் எவை என்றும், அக்குறைபாடுகளை நாம் களைந்து கொள்ள முடியாதா என்றும் எண்ணிப் பார்க்கவும் நாம் கடமைப் பட்டுள்ளோம்.

முதற்கண் தி. மு. க வின் கட்சியமைப்பே ஒரு நல்ல அரசியல் கட்சி யமைப்பாக இல்லை என்பதே நம் கருத்து. அதன் கொள்கைகளும் தெளிவானவையாக இல்லை. அதன் போக்கும் அது கூறப்படும் ஒன்றிரண்டு கொள்கையளவிலாவது ஒட்டிப் போவதாக இல்லை. அது தன் தாய்க்கட்சியிலிருந்து பிரிந்த பொழுது அதன் கொள்கை வேறு. சிறிது வளர்ந்த நிலையில் அதன் கொள்கை வேறு. இப்பொழுதுள்ள நிலையில் அதன் கொள்கை வேறு. திராவிடர் கழகத்திலிருந்து அது பிரிந்து வெளி வருகையில் அது, தன் கொள்கையில் எவ்வகையான மாற்றமும் இல்லை என்றும், அது பிரிவதற்குக் காரணம் கொள்கை வேறுபாடன்று என்றும், தலைமையின் போக்குப் பிடிக்காததே என்றும், எனவே அது தன் தாய்க் கட்சிக்குத் துணையாக நின்று (இரட்டைக் குழல் வேட்டெஃகம் போல்) பணியாற்றும் என்றும், அஃது ஒரு குமுகாயச் சீர்திருத்தக் கட்சியே என்றும் தன்னைத் தமிழ் மக்கள் முன் அறிமுகப்படுத்திக் கொண்டது. அக்கொள்கையில் அணுவளவும் இக்கால் கடைப்பிடிக்கப்படுவதில்லை. அதன்பின் அது தன்னை ஓர் அரசியல் கட்சியென்று வெளிப்படையாகக் கூறியதுடன் அமையாது, அதன் அடிப்படையான நாட்டுப் பிரிவினையையும் கைவிடப்பட்டதாக வேறு அறிவித்தது. இக்காலோ பேராயக்கட்சியை வீழ்த்துவதே தன் நோக்கமென்றும் எப்பாடு பட்டாகிலும் எவ்வளவு வளைந்தும் நெளிந்தும் கொடுத்தாகிலும் தான் அரசுக் கட்டிலில் அமர்வதே தன் கட்சியின் இலக்கு என்றும் கூறிக்கொள்கின்றது. வெளிப்படையாக நோக்குவார்க்கும் அதன் இக்கால ஆராவாரப் பேச்சுகளில் மயங்குவார்க்கும், உள்ளீடற்ற அதன் உட்கோள் புலப்படாதாகையால், அதுபற்றி நாம் கூறும் உண்மை அவர்க்குக் கசப்பாயிருப்பதில் வியப்பில்லை.

பொதுவாக நம் குமுகாய அமைப்பில் ஏற்பட்டுள்ள குறைகளே நம் அரசியல் வீழ்ச்சிக்கு அடிப்படையானவையாகும். இக்குறைபாடுகளை நீக்கிக் கொள்ளாமல் நாம் ஒரு நல்லரசை ஏற்படுத்திவிட முயற்சி செய்வது, உளுத்துப்போன தூண்களின் மேல் போடப்படும் கூரைபோல் நிலையற்றதாகும் என்பதை நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும். அரசியல் புரட்டுகளாலும், ஏமாற்றுப் பேச்சுகளாலும், மதிமயக்கான சொல்லாரவாரங்களாலும் வலிவான ஓர் அரசியல் அமைப்பை உருவாக்கிவிட முடியாது. கால இளைப்பாலும், சூழலின் வலிவாலும் அத்தகைய அரசியலை உருவாக்கி விடினும் அதுவும் பேராயக் கட்சியினரின் வலிவற்ற அமைப்புப் போலவே சாம்பிப்போய்

பிறர் கைகளுக்குள் எளிதே உட்படுத்தப்பட வேண்டியதாகவும் போய் விடும் என்பதையே நாம் வலிவாகச் சொல்லிக்கொள்ள விரும்பு கின்றோம்.

இனி, திரைப்படங்களின் புல்லிய வுணர்வாலும், மேடைப் பேச் சாளர்களின் ஆரவார அங்கலாய்ப்புகளினாலும், வண்ண வண்ணமான தோள் துண்டுகளினாலும் வளர்க்கப்படுவதன்று தமிழ் ! உண்மையான உணர்வாலும், சிதர்ந்தோடும் பல்லாயிரம் எண்ணங்களை ஒருமுகப் படுத்திக் காய்ச்சித் திரட்டி வடித்தெடுக்கும் கருத்துகளினாலும், இம் மக்களினம்—இம் மண்ணுலக மன்பதை முழுவதும் சென்று பாயக் கூடிய உளப்புனலின் விளைவாகவும் வளர்க்கப்படவேண்டிய மொழி தமிழ்மொழி! அம்மொழியின் அருமை பெருமைகளை உணராத நிலை யில் நாம் நம்மை வைத்துக் கொண்டு, நாம் தமிழை வளர்க்க முற்படு வது, அவலை நினைத்துக்கொண்டு உரலை யிடிப்பதுபோன்ற மடமைச் செயலே. அவ்வாறான நிலையில் தமிழ் வளர்வதுபோல் தோன்றினும் அடுத்த தலைமுறையில் அதன் வளர்ச்சி பிறவுணர்வுகளால் சிதைக்கப் பெறுவதும் உண்மை. இது வரலாறு. இனித் தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபடும் பாவாணர், அப்பாத்துரையார், இலக்குவனார் போன்ற புல வர்க்குப் பிற கட்சிகளும் ஆளுங்கட்சியும் எவ்வாறு துணை நிற்க வில் லையோ, அவ்வாறே தி. மு .க வும் துணை நில்லாததுடன், கட்டாயம் வெளிவரவேண்டிய வரலாற்று நூல்கள், மொழி நூல்கள், அகரமுதலி கள் முதலிய வெளியீடுகளிலும் துளியும் அது கவலைப்படவில்லை. எனவே மொழி வளர்ச்சியிலும் தி. மு. க. தன் அடிப்படையான எண் ணத்தைச் செயல்படுத்த வில்லை. கலைஞர் பேசுவதே தமிழ் என்றும், அறிஞர் உரைப்பதே மொழி என்றும், நாவலர் உரைப்பதே இலக்கியம் என்றும் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ள நாம் முனைந்துவிடக் கூடாது. (இவர்கள் இவ்வாறு கருதுவார்களானால் ஆதித்தனார் 'தினத்தந்தி' எழுதுவதே தமிழ் என்றும், 'ஆனந்தவிகடனார்' தாம் எழுதுவதே தமிழ் என்றும், இராசாசி தம் கல்கியில் வருவதே தமிழ் என்றும் கூறிப் பெருமையுறுவதில் வியப்பில்லை. அக்கால் மறை மலையடிகளார்க்கும் வையாபுரிக்கும் வேறுபாடுகளே இரா. ) இந்தி எதிர்ப்பில் உயிர் நீத்தவர்களைத் தமிழர்கள் என்று சொல்லிக் கொள் வதை விடுத்துத் தங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் என்று கூறுவதி லும் (அதுவும் சிறிதளவே உண்மை!) சிறுமையே புலப்படுகின்றது. வளர்ந்து வரும் இளைஞர் குமுகாயத்தின் ஆணிவேரில் போலித் தமிழ்

உணர்வின் வெற்றுரவாரங்களை நீராகப் பாய்ச்சி விடுவதே நம் மொழி வளர்ப்பாக இருக்கக் கூடாது. இத்தகைய புல்லிய நினைவுகளால் தாம் நம் தமிழர் உணர்வு இன்னும் ஒளி மணிபோல் காழ்க்கவில்லை. எனவேதான் அவர்களுக்குத் தாய்மொழிப் பற்றின் உண்மையான நோக்கங்களை ஆயிரக்கணக்கான சொற்களில் எடுத்துக்கூற வேண்டியிருக்கின்றது. எனவே தி. மு. க. வளர்ப்பதாகக் கூறிக் கொள்ளுகின்ற தமிழ்த் தொண்டிலும் அது மெய்ம்மையாக முழுமையாக ஈடுபடவில்லை என்றே சொல்லுவோம். ஓர் உண்மையான தமிழ்த் தொண்டன் என்ற நிலையில் நாம் இதனைச் சொல்லுகின்றோமே யன்றி வேறு எந்த நோக்கத்துடனுமன்று.

இனி இக்கட்சி தனக்காக வகுத்துக்கொண்ட அரசியல் கொள்கைகளாகிலும் வலிவு பொருந்தியனவாக இருக்கின்றனவா எனில் அதுவும் வருந்துதற்குரியதே! பேராயக்கட்சியை எதிர்த்து மாநில அளவில் நாம் வெற்றி பெறுவது பேராயக் கட்சிக்கு வேண்டுமானால் தீங்காக இருக்குமேயன்றித் தமிழகத்திற்கு அதனால் எள்ளளவும் நன்மை ஏற்படப் போவதில்லை. மாநிலஅரசை நாம் கைப்பற்றி விடுவதாலேயே இந்தி நுழைப்பைத் தடுத்துவிடவும் முடியாது.கேரள மாநிலமே இதற்குச் சான்றாகும். எதிர்க்கட்சிகளின் கைவலுத்த அந்நிலத்திலும் இந்தியின் கை ஓங்கித்தான் உள்ளது. அங்கு இந்தியா முழுமைக்கும் அமைக்கப்பெற்றிருக்கும் ஓர் அமைப்பை நம் மாநில அளவில் முரித்து விடுவோம் என்று பறை சாற்றுவது உண்மையானதாகவும், நடைமுறைக்கு ஒத்ததாகவும் இல்லை.

இடைக்காலத்தில் ஏற்பட்ட பொருளியல் வீழ்ச்சிகளை நம் அரசியல் கொள்கைக்குப் பயன் படுத்திக் கொள்வதனால் நம் அரசியல் கொள்கை வலுப் பெற்றதாகிவிடாது. வறுமையால் இறந்து போகும் பிணங்களை எடுத்துக் காட்டி நம் அரசியல் கொள்கைக்கு வலிமை தேடிக் கொள்ளும் அளவிற்கு நம் அரசியல் கொள்கை தாழ்ந்ததாக இருந்துவிடவும் கூடாது மேலும் பொருளியல் சரிவு என்பது இந்தியா முழுமைக்கும் பொதுவானதாகும். மாநில அளவில் அமைந்த ஓர் அரசு அதைச் சரிசெய்து விடமுடியும் என்பது மக்களை ஏமாற்றுவதாகும். பொருளியல் எழுச்சியும் சரிவும் அரசியல் அமைப்பில் ஏற்படும் மேடுபள்ளங்களே தவிர, அரசியல் மாற்றத்திற்கு அடிப்படையான காரணங்களாகி விடா. ஒரு நாட்டின் எல்லா வகையான மக்க

ளையும் நிறைவு செய்யும் படியான அரசாட்சி இவ்வுலகில் எந்த மூலையி லும் எந்தக் காலத்திலும் தோன்றியதுமில்லை; தோன்றப் போவது மில்லை. வரலாறுகளில் வேண்டுமானால் இவ்வாறு எழுதி வைத்துக் கொள்ளலாம். ஆனால் கி. மு. இருபதாம் நூற்றாண்டிலிருந்து இன்று வரை உலகின் எந்த ஒரு நாட்டின் அரசியலிலும் அமைதியிருந்த தில்லை. இதற்குக் காரணம் மக்களின் பல்வேறு வகையான மனநிலை, அறிவுநிலை, பண்பாட்டு நிலையான அமைப்புகளே. இதை நன்கு புரிந்து கொண்டால், அரசியல் ஆட்சி மாற்றம் என்பது, வெறும் சூழ் நிலை மாற்றத்தால் அமையும் ஒரு புரட்சியே தவிர மக்களுக்கோ, நாட் டிற்கோ கட்டாயத் தேவையான—என்றும் மாற்றவியலாத ஒரு நிலை யான மாற்றமன்று என்பது விளங்கும். பொதுவாகப் புரட்சி என்பது ஒரு குழுவை விரட்ட இன்னொரு குழு செய்யும் முயற்சியே! அந்தக் கருவியை எந்தக் குழுவும் எந்தக் குழுவின்மேலும் பயன்படுத்தலாம். இக்கால் நமக்குப் புரட்சி முகாமையானதாக இருக்கலாம். ஆனால் புரட்சியால் ஏற்படப்போகும் விளைவோ அதைவிட இன்றியமையாத தாகும். இதற்குமாறான நிலை இக்கால் பணமே குறிக்கோளாகக் கருதப் பெற்று, அதன் வழி அமையும் வாழ்க்கை குறிக்கோளாகக் கருதப் பெறுமை போன்றதாகும்.

இவ்வாறு குமுகாயவியல், மொழியியல், அரசியல், பொருளியல் ஆகிய நான்கு துறைகளிலும் நமக்கு நம்பிக்கை யூட்டக்கூடிய கட்சி யாக தி. மு. க அமையவில்லை. போதிய அடிப்படைகளை அமைத்துக் கொள்ளாத நிலையில், நாம் மாநில அமைப்பில் அரசோச்ச விரும்புவ தும், வடநாட்டானின் முரட்டுப் போக்கினைத் தளர்த்த விரும்புவதும் அதனால் நமக்கு உட்பகையாக உள்ள பார்ப்பனரின் கைக்கு வலி வேற்றுவதும் நாம் மதிக்கத்தக்கனவாக இல்லை.

இனி, ஓர் அரசின் ஆளுமைக் கொள்கை(Administrative Theary)யால் ஏற்படும் தொல்லைகள் வேறு. அரசியல் கொள்கை (Political Theary)யால் ஏற்படும் இடர்ப்பாடுகள் வேறு. ஆளுமைக் கொள்கை அரசியல் கொள்கையைச் செயல்படுத்த ஓர் அரசு வழிப்பற் றும் கொள்கையாகும். அரசியல் கொள்கையென்பது ஓர் அரசு தனக் காக அமைத்துக்கொண்ட அமைப்புக் கொள்கையாகும். நாம் பேராயக் கட்சியைக் கடிவது அதன் அரசியல் கொள்கை பற்றியே! தி. மு. க வும் பிறவும் குற்றஞ்சாட்டுவது அதன் ஆளுமைக் கொள்கைபற்றியே.

பேராயக்கட்சி மாநிலங்களைத் தன் அதிகாரத்திற்குக் கட்டுப்படுத்தி இணைத்திருப்பதும், அவ்வாறு இணைத்த இணைப்பை ஒருமைப்பாடு என்ற போலிப் பேச்சாலும், ஆட்சிமொழி என்ற ஒருசார்புக் கொள்கையாலும் வலுப்பெறச் செய்வதும், அந்நிலைகளைத் தட்டிக் கேட்பின் தம் அதிகார வெறியால் மக்கள் உரிமையைக் கட்டுப்படுத்துவதும் நாம் கண்டிக்கத்தக்கனவாகும். அவ்வாறு கண்டித்தும் அரசு தன் அரசியற் கொள்கையைத் திருத்திக் கொள்ளாமற் போமாயின், இவ்விந்தியக் கூட்டாட்சியினின்று விடுபடுவதும் தனித்தமிழ் நாடு அமைப்பதுமே தமிழர்களாகிய நமக்கு இருக்க வேண்டிய அரசியற் கொள்கையாகும். இதுவன்றி அரசின் ஆளுமைக் கொள்கையால் பொருளியல் சுரண்டல்கள், அலுவலகங்களில் கையூட்டுகள், திருட்டுகள், பஞ்சங்கள் முதலியன நிகழுமானால், அதற்கு அவ்வரசு மட்டும் பொறுப்பாகாது. அதற்கு மக்களாகிய நாமும் பொறுப்பே! ஓர் ஆசிரியர் எடுத்துக் கொண்ட பாடத்திட்டம், பிழையானால் நாம் ஆசிரியரைக் கேட்கலாம்; கண்டிக்கலாம்; தேவையானால் ஆசிரியரை மாற்றவும் செய்யலாம். ஆனால் பிள்ளைகள் பொய்சொல்வதற்கும், அண்டை அயலில் திருடுவதற்கும் ஆசிரியர் மட்டும் பொறுப்பாகார்; நாமும் பொறுப்பாவோம். இப் பொறுப்பை முழுவதும் எப்படி நாம் நம் தலையிலேயே போட்டுக் கொள்ள மாட்டோமோ அப்படியே ஆசிரியர் தலையிலும் போட்டுவிட முடியாது. இவற்றைப் பற்றித்தான் தென்மொழி இதுவரை பல ஆசிரியவுரைகளில் கூறியிருக்கின்றது; விளக்கியுமிருக்கின்றது.

இனி, நம் நோக்கந்தான் என்னவெனில் ஆட்சி பேராயக்கட்சியினுடையதாகட்டும்; வேறு யாருடையதாகத்தான் ஆகட்டும். அவ்வாட்சி மாநில அளவில் உள்ள அதிகாரங்களைக் கட்டுப்படுத்தக் கூடாது. இயற்கையாக நமக்குள் அமைந்த மொழி, பண்பாடு, கல்வி இவற்றில் குறுக்கிடவும் கூடாது. இவற்றின் வளர்ச்சிக்கு முழுத் துணையாக இருக்கவும் வேண்டும். இன அளவில் ஓரினம் பிறிதோர் இனத்தை அடக்கியாளும், அல்லது ஏமாற்றி வாழும் கீழ் நிலைக்கு அரசு இடம் வைக்கக் கூடாது. மாறாக ஒழித்துக் கட்டுதலும் வேண்டும். இத்தகைய நிலைக்கு, நடுவணரசு ஒத்து வராவிடில் தமிழகத்தைப் பிரிப்பதற்கே முயற்சி செய்ய வேண்டுமேயல்லாமல் கொள்கை மாறும் கூட்டாளிகளுடன் மாநில அளவில் அரசமைப்பது அந் நடுவணரசுக் கொள்கைக்கே துணை நிற்பதாவதுடன், பார்ப்பன

ரின் சூழ்ச்சிகளுக்கும் நம்மைச் சிக்கக் கொடுப்பதும் ஆகும் என்பதை நாம் திட்டவட்டமாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். எந்நிலையிலும் நம் மொழிக்கும் பண்பாட்டுக்கும் வாழ்விற்கும் ஊறு நினைக்கும் ஓர் அரசினின்று நாம் விடுபடவே நினைக்கின்றோம். அரை மனமாகவும் குறைமனமாகவும் அச்சத்தோடும் இணைந்திருப்பதைவிடப் பிரிந்து போவதே நல்லது. அந்த அளவில் தமிழக விடுதலையைத் திரு. அண்ணாத்துரை அவர்கள் அறிவிப்பார்களானால்நாமும் நம்மைச்சார்ந்த தமிழரும் அவருடன் தோளொடு தோள் கொடுத்து துணையாக நிற்போம் என்று உறுதியாகக் கூறுகின்றோம். அந்நிலை தவிர்ந்த வேறு எந்நிலையிலும் சில பல காரணங்களுக்காக இப்பொழுது இருக்கின்ற நிலையே இன்னும் சிறிதுகாலத்திற்கு வரவேற்கப்படுவதில் தவறில்லை. இப்பொழுதுள்ள அமைப்பிலேயே நாம் நமக்குவேண்டிய குமுகாய விழிப்பையும், நம் இன உயர்வையும் பெற வாய்ப்பிருப்பதும் அக் காரணங்களில் ஒன்றாகும். இந்த வாய்ப்புகளை நாம் பார்ப்பனர் வழி இணைந்து பெற்று விடுவோம் என்பது குதிரைக் கொம்பே! இப்படிச் சொல்வதால் நாம் பேராயக் கட்சிக்குத் துணை போவதாக எவராவது கருதுவார்களானால் அஃது அவர்களின் அறியாமை ஆகுமேயன்றி நம் கொள்கைச் சறுக்கல் ஆகாது என்று தெளிய வேண்டுகின்றோம். இந்நிலையில் அண்மி வரும் தேர்தலின் விளைவிலேயே நாம் முழுக்கருத்தும் செலுத்த வேண்டியிருப்பதால், இந்தியெதிர்ப்பு முழக்கங்களையும் தமிழ்ப் பகைவர்களின் மேல்எழும் சீற்றத்தையும் ஒருவாறு தணித்துக் கொண்டுள்ளோம். அது வன்றி, நாம் இந்தி யெதிர்ப்புக் குரலை அடைத்துக் கொண்டதாக நினைப்பதற்கும் இடமில்லை. அவ்வாறு நினைக்கும் முதுகரிப்புக்காரர்களுக்கும், அரசினர்க்கும் நாம் மிகவும் வருந்துகின்றோம்.

இவ்வடிப்படைகளையெல்லாம் வைத்துப் பார்க்கும் ஒருவர்க்கு, இக்கால் நாம் கூறுகின்ற கருத்துகள் தேவையற்றனவாகவோ, பொருளற்றனவாகவோ, குழப்பமாகவோ படா என்பது திண்ணம். இனி, இவ்வாறு கூறுவது நாம் வருகின்ற தேர்தலில் எக்கட்சியின் பக்கம் நிற்றல் வேண்டும் என்று தடுமாறும் நடுநிலைத் தமிழர்க்கு நாம் வழி கூறியதாகாது ஆகையால், அதுபற்றி அடுத்த இதழில் பேசுவோம்.

—பெருஞ்சித்திரன்.

# தமிழ் நெஞ்சம்!

துரை-மாணிக்கம்.

வானுர்ந்த பள்ளிகளில் கல்லூரி தன்னில்
வளர்கல்வி பயில்கின்ற இளைஞரெல் லார்க்கும்
தேனூர்ந்த செந்தமிழ்மேற் பற்றில்லை; முன்னோர்
தேக்கிவைத்த நூற்களிலே ஈடுபா டில்லை;
கூனூர்ந்த மென்முதுகும், பொலிவிழந்த தோளும்
குழிவிழுந்த விழிகளிலே ஒளியிழந்த நோக்கும்,
ஊனூர்ந்த பருவுடலும் வாய்ந்திருக்கக் கண்டேன்;
உளங்கவன்றேன், அவர்நெஞ்சில் தமிழில்லை யன்றோ?

படிக்கின்ற மங்கையர்க்கும் முகத்திலொளி இல்லை;
பழகுகின்ற செயல்களிலும் செந்தமிழ்ப்பண் பில்லை;
துடிக்கின்ற இடையில்லை; பருத்துள்ள தூண்கள்!
தோள்களிலும் அழகில்லை; வலிவில்லை; சூம்பல்!
நடிக்கின்ற பொய்யன்பு; நாகரிகப் போலி!
நலிந்தவுடல்; இல்லறத்தில் நாட்டமிலாப் போக்கு!
கடிக்கின்ற உரையாடல் வாய்ந்திருக்கக் கண்டேன்;
கவல்கின்றேன்; அவர் நெஞ்சில் தமிழில்லை யன்றோ?

கற்கின்ற காளையர்க்கும் கன்னியர்க்கும் இக்கால்
கல்வியிலே பிடிப்பில்லை; அறிவிலில்லை ஆர்வம்!
சொற்குன்றும் மொழிகளிலே சோர்வுபடப் பேசிச்
சோற்றுக்கு வாழ்வமைப்பார்; உள்ளநலங் காணார்!
விற்கின்றார் மொழிமானம்; தன் மானம்; விற்றே
விழலுக்கு நீர்பாய்ச்சி வீழ்ந்திறந்து போவார்!
பொற்குன்றம் பொடிமணலாச் சிதறுண்டு போகும்
பொருட்டென்ன ? அவர்நெஞ்சில் தமிழில்லை அன்றோ?

வல்லடிமை இனித்ததென்ன? மெய்புளித்த தென்ன?
வாங்கியுண்ணும் கைச்சோறிங் குயர்ந்ததென்ன?வாழ்வில்
மல்லடிமைப் பட்டதென்ன? அறம்மறந்த தென்ன ?
மானமெனும் உயர்உணர்வும் அற்றதென்ன? உள்ளம்
புல்லடிக்கும் கீழடியாய்த் தாழ்ந்ததென்ன? பெண்டிர்
பொற்பிழந்து போனதென்ன? உயிர்ப்பழிந்த தென்ன?
சொல்லடிமைப் பட்டதன்றோ? மொழியடிமைப் பட்ட
சோர்வன்றோ? அவர்நெஞ்சில் தமிழில்லை அன்றோ?

# இயற்கையாற்றுப் படை

ம. இலெ. தங்கப்பா.

ஊர்படு வல்சி உயர்திறம் உரைப்பின்
நீர்படும் நாவே! நெருப்பின் அடாஅ(து)
இயல்படும் ஊணின் இனியவும் உளவோ?
வண்குலை இளநீர் வழுக்கையின் உறிஞ்சி
வெண்முதிர் பருப்பு மிசைதலும் இனிதே.
முற்று மகவின் இளந்தலை புரையும்
பாசரி படர்ந்த பைங்கண் நுங் ககழ்ந்து
பாளை வடிநீர் பதனுற அளவி
ஓலைப் பசுங்குடை உண்ணலும் இனிதே.
நெய்கமழ் தீம்பால் நிறைபசுங் கம்பு

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

வளர்ந்துவரும் இளையோர்க்கும் மங்கையர்க்கும் நெஞ்ச
வளங்கொழிக்கும் அறஞ்சான்ற தமிழ்க்கல்வி வாய்ந்தால்
தளர்ந்துவரும் உடல்களிலே வீறுவரும்; தோளில்
தாவிவரும் பூரிப்பு; முகத்திலொளி மின்னும்!
கிளர்ந்துவரும் மெய்யன்பு; கீண்டியெழும் பண்பு!
கிளத்துகின்ற உரைகளெலாம் தேன்சுவையை விஞ்சும்!
வளர்ந்துவரும் உளத்தூய்மை! விளைந்துவரும் வாய்மை!
வினைகளிலும் அஞ்சாமை நேர்மைவரு மன்றோ?

தமிழர்க்குத் தமிழ்நெஞ்சம் வாய்ந்துவிடு மாயின்
தமிழ்க்குருதி ஊற்றெடுக்கும்; தமிழுணர்வு வீறும்!
உமிழ்கின்ற வல்லடிமை மொழியடிமை சாகும்!
ஊக்கமிகும்! தாக்கவரும் பகைதூளாய்ப் போகும்!
அமிழ்தூற்றுச் சுனைசுரக்கும்; அன்புமனம் பூக்கும்!
அமைதியெழும்; ஆர்ப்பரித்த புன்மைநிலை நீங்கும்!
தமிழரறம் செழித்தோங்கும்! உலகதனை வாங்கும்!
தாழ்வகலும்! வாழ்வலரும்! தமிழின்பம் அன்றோ?

('தமிழ்நெஞ்சம்' என்ற இதழில் வந்தது. 'தென்மொழி' அன்பா நலங்கருதி ஈண்டு மீண்டும் வெளியிடப்பெற்றது.)

கைகமழ் வாகக் கசக்கியுண் பினிதே.
உறுகேழ் வரகின் நறுங்காழ்ப் பைங்கதிர்
சிறுதீ மாட்டி வதக்கியுண் பினிதே.
பயற்றிளஞ் செங்காய், உழுந்தின் பசுங்காய்
எயிற்றிடை அதுக்கிச் சூர்தலும் இனிதே.
வெண்ணிற மகளிர் விரலெனப் பொலிந்த
தண்ணியல் வெண்டைப் பிஞ்சுணல் இனிதே.
வண்முதிர் கன்னல் வயல்வாய் முரித்துக்
கூருகிர்க் கிழித்துப் பல்லிற் சவட்டிச்
சாறுகடை யொழுகச் சப்பியுண் பினிதே.
கிணற்றயல் ஓங்கிய கெழுமர வள்ளி
மணற்கிழங் ககழ்ந்து மிசைதலும் இனிதே.
கொம்பிடைப் பழுத்த வம்பலர் தேமா
அணிற்கடி வீழ்ந்த தயிறலும் இனிதே.
புழுக்கறை போகிய முழுக்குலை வாழைப்
பழுஉக்கனிப் பிழிவின் பனுட்டளாய்த் துழந்த
கொழுஉக்கண் மிதவை பருகலும் இனிதே.
பெருந்தேன் துவைத்த வருக்கை நறுஞ்சுளை
நரந்தம் பிழிவோ டருந்தலும் இனிதே.
அட்டுண் பதத்தின் அடுக்கமுங் கேளாய்:
இட்டிட் டுண்ணும் வெறுநெல் அடிசில்
வட்டித் துண்டலின் மாற்றம் இல்லாச்
சுவைதீர் வாழ்க்கைப் புதுவது கூட்டும்
பயன்தேர் கூலப் பல்திற நல்லூண்
நயங்கூர் வரிசையின் நவிலுங் காலைச்
சுவைதரு சாமைச் சொன்றியுந் தலையே!
வழுதலைப் பிஞ்சின் குழம்பொடு பெறுமே.
கம்பிட் டிடித்துக் கழைதுழந் தட்டுண்
வெய்தூண் ஆர்தலின் வடிநீர் பெய்து
நளிரிளங் காலைக் குளிருண் நுகரும்
விழைபதம் இனிதே! வெம்மையும் அகற்றும்.
பசிய நற்றினை உணக்கிக் குற்றிய
அவைப்புமாண் அரிசி ஆன்பால் உலைப்பெய்து
இன்னறும் பாகின் பருப்பிட் டிறக்கிய

நெய்கமழ் கண்ணமிழ் தூண்சுவை நிறைமே!
நுண்கேழ் வரகின் நுறுங்குமாக் கூழ்செய்(து)
இருந்துநனி துழவிய மாந்தளிர் ஒண்களி
கறைச்சிறு கருணை புளிப்பெய் தாக்கிய
உறைப்புறு புளிங்கறி விராயுணின் உயர்மே!
வன்தாள் வரகின் வள்அவர் வாக்கல்
பைம்பருப் பாணம் படர்தரல் இனிதே!
சோளநன் மா உழுந்தொடும் அரைத்து
வேவித் திறக்கிய வெய்கமழ் இட்டளி
உப்பிடு செந்தயிர் தொட்டுணில் ஒளிர்மே!
அதாஅன்று, அவைப்பறு செந்தவிட் டரிசியின் அட்ட
சுவைப்பினம் போகாச் சொன்றி ஊற
உழுந்து கடைந்த செழும்பருப் பளியல்
கொழுவிய தேங்காய்ப் பாலிடு குழம்பின்
இழுதுடை ஆநெய் வழிபதம் அவணே!
சுரைவெண் பிஞ்சின் ஆன்பால் தேக்கி
நறும்பா கிட்ட கூட்டும் அவணே!
பொதிமடல் வாழைப் பூச்சிதைத் திட்டுத்
துருவுகாய் விரவிய துவட்டலும் அவணே!
வழுதலைப் பிஞ்சு, வாழை முதிர்காய்
விளையா வெண்டை, இளங்கொத் தவரை
முற்றா முருங்கையோ டாவியின் உவித்துச்
செந்தயிர் பிசைந்த அவியலும் அவணே!
அணில்வரிச் சிறுகாய் ஐதுபோழ் வகிரின்
கடிப்புடை உள்ளிப் பிளவு கலந்து
முறிகமழ் கஞ்சகம் முளிதயிர் அளைஇய
நெய்குய் கடுகின் பச்சடி அவணே!
அதாஅன்று, உண்சுவை மிகுக்கும் பயங்கெழு கீரை
எண்ணப் படாஅ: இயம்புவல் சிலவே;
சேவற் கொண்டை, சிறுசெங் கீரை
நாவின் விலகா நன்னீர் ஆரை
துளிரிள முருங்கை, தூதுளம், வேளை,
ஒளிர்தண் பசலை, உயர்வல் லாரை
திங்கட் கிருமுறை உண்குறும் அகத்தி

முக்கி ரட்டை, முறி இள முசுட்டை,
நன்முடக் கொற்றான் குப்பை விளையே,
உள்ளி நறுந்தாள், வெந்தய நன்முளை
கொடுப்பை, பொடுதலை, சேம்பின் பொற்றளிர்
வித்திட் டுண்டும் விழைவு பெருக்கும்
கொத்து மல்லிக் கொழுந் தழை, புதினா,
துத்தி, பிரண்டை, புளிச்சை, பாலடை
பிணிமதன் அறுக்கும் பல்கீ ரைத்தே
திணிவண் சீறூர்ச் சிறப்புங் கேளினி,
ஆன்மடி கறந்த பாலே, பாலட்(டு)
ஏடுறத் தோய்த்த தயிரே, தயிரின்
மத்துறக் கடைந்த மோரே, மோரின்
திரளென மிதந்த வெண்ணெய், வெண்ணெயின்
முறியிட் டுருக்கிய நெய்யே; நெய்கமழ்
பாகொடு கலந்த பண்ணியம் பலவே;
அப்பந் தேங்குழல், அடை, நன்முறுக்கே.
பிட்டிடி யாப்பம், குழலிடு பிட்டு,
கட்கமழ் ஆப்பம், கவின் கொழுக் கட்டை,
எட்பொரி உருண்டை, எள்ளிடி, பருப்பிடி,
மணிபதி பொற்றிரள் மாண்பொரி விளங்காய்,
நாச்சுவை கிளறிக் குடல்நலி வுறுத்தும்
நகரப் பண்ணியம் போலாதீங் கிவை,
பயன்நலம் பொதுளிப் பல்சுவை மிகுக்கும்
நயன்நனி உணர்குநர் நகர்நா டுவரோ?
விருந்தொடு படரா நாள்விழல் என்னும்
திருந்திய நெஞ்சின் சிறுகுடி மூதூர்
வளத்தொடு புணர்ந்த வாழ்க்கை மேற்றே
உளத்தொடு புணர்ந்த உலகின் செப்பம்!
செல்வழி தோறும் நகைமுகம் கண்டு
சீறூர்ப் படப்பை சிறுவரை கழியின்
மங்குல் படர்திரை மழைவண் கொண்மூ,
அங்கண் விசும்பின் அவிர்ஒளி நீலத்துச்
சேணுற நிவந்த பன்மலை யடுக்கம்
காணிய இலங்கும் கவின்புணர் வனப்பின்

வேட்கை துரப்ப விரைகுவம் எனினே,
செல்விலங் குழந்த கொல்லை நெடுவழி
முள்ளிலங் கெயிற்றின் முல்லை நகைதர
செவ்வடி மழையிதழ்ச் சேடல் உதிருற,
பைந்நனைப் பித்திகம் பாசடை நிமிர
முள்முனை ஈந்தின் முனையகம் நெருக்கிக்
கைசுருள் தும்பிக் கவின்முக வடிவின்
பாசிலை அடுக்கிய பைந்தண் டுச்சிக்
கவின்குலைக் காந்தள் கைம்மலர் ஒளிரக்
கல்லிடைக் கலித்து மென்சுரும் பார்ந்த
பல்லிணர்க் காயா நுண்மணி பொலிய,
செவ்வெறும் பேய்க்கும் மென்முறிக் குழிஞ்சி
கள்ளூறு குழிசியிற் கனிநயந் தளிப்பப்,
பசுநெல் மணிநேர் பாசிளம் புன்முகை
அசைவெண் சிறுபூ வலாரி பூப்பத்
தளவமுங் கோடலும் தழிஇத்தலை மணந்த
குளவி வேலியில் தூதுளங் கவினச்
சேவற் கொண்டையும் செந்துணர் விரிச்சியும்
ஓவத் தன்ன ஒளிர்புனல் தோன்றும்
சிறுகுட்டத்துச் செறிந்த திண்கரை
நொச்சி மறையப் பாலை படரும்.
தும்பையும் துழாயும் எங்கணும் மயங்கும்.
ஈங்கை இடுகரை வெண்மணல் ஓடை
வாங்குசினைக் கருவேல் பல்நிலாப் பூக்கும்.
துவளிலைத் துத்தி துவன்றிய கல்லதர்
இவர்கொடிக் கோவை வெண்பூ ஏந்தும்
கூவிளம் அலர்ந்த செம்புல வரைப்பின்
ஆவிரைப் பொற்பூ காடு பொலியும்.
வம்பலர் நுணவமும், கொம்பலர் முருக்கும்
கொம்பலர் வேம்பும் குளிர்தரு நீணிழல்
செம்மறி நிரைசாய்ந் தம்புல் கறிக்கும்

(வளரும்)

# நூற் சுருக்கம்

தொடர் நான்கு

## உலகின் முதற் செம்மொழி

## (The primary classical language of the world)

மொழிநூற் பேரறிஞர் பண்டித. புலவ. கலைத்தலைவர்
ஞா. தேவநேயப் பாவாணர் எழுதியது.

### மொழியியலின் தோற்றம்

வெள்ளைக்காரன் சொல்வதெல்லாம் உண்மை என்று குருட்டுத் தனமாகக் கருதிக்கொள்ளும் சிலர் படித்த தமிழரிடையே இன்று கூட இருப்பது வியப்பே. தற்கால அறிவியல் துறைகள் பல மேலை நாட்டில் தோன்றியிருத்தல் உண்மையே. ஆனால் மொழியியலோ மிகப் பழையது. அதன் தோற்றம் பழந் தமிழகத்துக்குரியது.

தொல்காப்பியமே இதற்குச்சான்று. தொல்காப்பியத்தின் பல்வேறு பாகுபாடுகளையும் இன்றைய மொழிநூற் பாகுபாடுகளோடு ஒப்பிட்டுக் காண்பார் இதனை உணரலாம். செந்தமிழ், கொடுந்தமிழ் என்ற பிரிவும், இயற்சொல், திசைச்சொல்,வடசொல் என்ற பாகுபாடும் முதனிலை, ஈறு, இடைநிலை, புணர்ச்சி, சாரியை, திரிபு முதலியவற்றைப் பாகுபடுத்தி ஆய்ந்திருக்கும் முறையும் மொழியியல் அறிவு எந்த அளவு தமிழரிடையே வளர்ந்திருந்தது என்பதைத் தெளிவாகக் காட்டும். இவ்வாறு தமிழர் அறிவியலாய்வோடு மொழியியலை வளர்த்து வந்துள்ளனர். ஆனால் வடமொழி வாணரோ தம் பொருந்தாக் கொள்கைகளையும் போலிக் கருத்துகளையும் அதில் நுழைத்து அதனைச் சிதைத்துவிட்டனர். அவர்களின் பொய்மைகள் வருமாறு:-

1. சமற்கிருதம் தெய்வமொழி ஆதலின் அஃது ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டது.

2. அனைத்து மொழிகளும் சமற்கிருதத்தினின்று பிறந்தவையே

3. சமற்கிருதம் வேறு எந்த மொழியினின்றும் கடன்பெறுது. வேறு மொழிகள்தாம் சமற்கிருதத்தினின்று மிகுதியும் கடன் பெற்றுள்ளன.

4. சொல்லின் இலக்கணக் கூறுபாட்டுக்கும் (Morphemes) அவற்றின் சொற் பொருட்கூறுபாட்டுக்கும் (Semanteures) உள்ள தொடர்பு இயற்கையானதும் என்றும் மாருததுமாகும்.

5. சொற்களுள் ஒருவகை இயல்பாகத் தாமே தோன்றியவை யாகும்.

6. சமற்கிருத மந்திரங்களின் ஆற்றல் அவற்றைச் சரியாகப் பலுக்குவதில்தான் உள்ளது. பிழையாகப் பலுக்கிளுல் பெருங்கேடுகள் நேரும்.

7. வேத ஆரியமும் சமற்கிருதமும் ஒன்றே.

8. வேதங்கள் என்றும் உள்ளவை. அவற்றை முனிவர் சிலா கண்டறிந்தனரேயன்றி அவை அவரால் உண்டாக்கப் பெறவில்லை அனைத்துக் கலைகளும் அறிவியலும் வேதங்களினின்று உருவானவையே.

எனவே, வெள்ளையர்களால் தவருகக் கொண்டு செலுத்தப்பட்ட மொழியியல் துறை பிராமண மொழியாராய்ச்சிச் சேற்றில் நன்ருகப் புதைந்து மீளமுடியாமற் கிடப்பதில் வியப்பில்லையே!

வண்ணனை மொழி நூலாரின் பிழைகள் (இத்தலைப்பிலுள்ள பகுதி தனிக் கட்டுரையாக நளி இதழில் வந்திள்ளது)

## மாக்சு முல்லர் கூட்டத்தினரின் மொழியியல் மயக்கம்:

பேரா. மாக்சு முல்லரும் அவர் கூட்டத்தினரும் சமற்கிருத மொழியில் வல்லவரானதுமே, அம்மொழியையும் அதன் சிறப்பையும் எங்கும் பரப்ப வேண்டுமென்ற ஒரு வெறியால் பீடிக்கப் பெற்றனர். அதனைத் தெய்வீகப்பணி என்றே கருதினர். அவர்கள் திராவிட மொழிக் குடும்பத்தைப் பற்றிக் கவனம் செலுத்தவுமில்லை. சமற்கிருதச் சுவடிகள் எல்லாம் உண்மையைத்தான் கூறுகின்றனவா என்று

பார்க்கவுமில்லை. இவ்வாறு கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக ஏற்கனவே தமிழுக்கிழைக்கப்பட்டு வந்த தீங்குடன், அவர்கள் அறிந்தோ அறியாமலோ இழைத்த தீங்கும் சேர்ந்து கொண்டது. சமற்கிருதமே இந்தியாவின் புனிதமொழி என்ற கருத்தை அவர்கள் முழுக்க ஏற்றுக் கொண்டனர். ஆரியவருகைக்கு முந்திய தமிழ்ச் சமயங்களான சைவ, வைணவங்களைப் பிராமணத் தொடர்புடையவை என்று குறித்தனர். இவ்வாறு மேலைநாட்டார் பார்வையில் அனைத்து இந்திய மொழிகளும் சமற்கிருதத்தின்றும் தோன்றியவையே என்ற எண்ணத்தை ஏற்படுத்திவிட்டனர். பர். கால்டுவெல், பேரா. வில்சன் போன்றோர் தமிழைப்பற்றிய சில தவற்றுக் கருத்துகள் கொண்டமைக்கும் மாக்சு முல்லர் கூட்டத்தினரின் பிழையான கருத்துகளே காரணம்.

ஆரியர் வருகைக்கு முந்திய தமிழ் இவர்களால் அறியப்பட்டிலதாதலின் இவ்வாறு பிழை செய்தனர். தொன்முது பழந்தமிழ் இலக்கியம் மிகப்பரந்தகன்று விரிந்து கிடந்தது. எந்த வேற்றுமொழியின் ஆட்சிக்கும் அஃது ஆட்படவில்லை. தற்பொழுது அஃது அழிந்து போனமையால் உண்மை தெரியவில்லை. தமிழின் இலக்கண அமைப்பு சிறந்தது; தனித்தன்மை வாய்ந்தது. இப்பொழுது கிடைத்துள்ள தமிழ் இலக்கண நூற்களில் முந்தியதான தொல்காப்பியத்தைப் போன்றதொரு சிறந்த நூல் உலகில் எங்கும் இல்லை. உலகறிந்த திருக்குறளும் சமற்கிருத ஆட்சிக்குட்படாததாகவும், அமைப்பில் முற்றிலும் வேறுபட்டதாகவும் உள்ளது.

சமற்கிருதம் ஒருபொழுதும் பேச்சுமொழியாக இருந்ததில்லை என்பது வெளிப்படை. ஒரு மொழி நூற்களிலிருந்தோ, கல்விக் கூடங்களிலிருந்தோ கற்றுக்கொள்ளப் பெறுமல் பொது மக்களால் பேசப்படுமானல் தான் அது வாழும் மொழியாகக் கொள்ளப்பெறும். சமற்கிருதமோ, அம்மொழி வல்லுநர் ஒரு சிலராலேயே பேசப்படுகின்றது. இவ்வாறு, கற்றறிந்த கூட்டத்தினர் முயன்ருல் எந்தச் செத்த அல்லது செயற்கை மொழியையும் கற்கவும் பேசவும் இயலும். பேரா. மோனியர் வில்லியம் என்பார் சமற்கிருதம் பேச்சுமொழியாக இருந்தது என்று நிலைநாட்ட முயலுகிருர். பண்டித கியாம். கிருட்டிணவர்மாவை அவர் தமக்குத் துணையாகக் கொள்கிருர். அவர் பாணினியின் காலத்தில் சமற்கிருதம் மக்களால் பேசப் பெற்று வந்ததாகவும் பிராகிருதத்துக்கு அடிப்படை சமற்கிருதமே என்றும் கூறுகின்ருர்.

சமற்கிருதம் இறந்தொழிந்த வேத மொழியினின்றும், அப்பொழுது வழங்கிய வட்டாரமொழிகளான பிராகிருதங்களினின்றும் உருவாக்கப்பெற்ற ஒரு சேர்க்கை இலக்கிய மொழி என்பதை மோனியர் வில்லியம் அறிந்திலர் என்பதையே அவர் கொள்கை காட்டுகின்றது. எனவேதான் அவர் ஏறத்தாழச் சமற்கிருதத்திலுள்ள சொற்கள் எல்லாம் ஆரியப் பிறப்பு வாய்ந்தன என்று கூட்ட முயல்கிருர். இதற்கு அவர் போலியானவும், பொருந்தாதனவுமாகிய பல சொல் மூலங்களைக் காட்டுகின்ருர். சிலவற்றுக்கு எந்த மூலமும் காட்டாமலும் செல்கின்ருர். சில எடுத்துக் காட்டுகள் வருமாறு:

"அம்பா: தாய் என்று பொருள்படும். இச்சொல் தென்னிந்திய மொழிகளில் அம்மா என்று திரிந்து வழங்குகின்றது." இது தலைகீழான சொல்லாராய்ச்சி. அம்மா என்ற சொல் பல்வேறு மொழிகளில் பல்வேறு வடிவில் திரிந்து வழங்கினும் அது தமிழே என்பது வெளிப்படை.

"காலா: கணக்கிடுதல்...ஒரு குறித்த நேரம். பொதுவாக நேரம்". இது காலம் என்ற தமிழ்ச் சொல்லின் ஈறு கெட்ட திரிபாகும். இது தூண், அல்லது தூணைப்போன்றது, நீட்சித்தன்மையுடையது காற்று, நேரம் (பொதுவாக) என்னும் பொருளில் வழங்கும் 'கால்' என்பதனடியாகப் பிறந்தது. கால் என்பது அவ்வுறுப்பு உடலின் நான்கில் ஒரு பகுதியளவே யாதலான் நான்கிலொரு பகுதியைக் குறிக்கவும் பயன்படும். காலை-கால் என்பதினின்று பிரிந்த, - நேரத்தைக் குறிக்குஞ் சொல். காலம் என்ற சொல் காலைப்பொழுதையும் குறித்தலைத் தமிழகத்தின் "வடக்குப்பகுதி வழக்கிற்"காணலாம். Calculate என்னும் ஆங்கிலச்சொல் Calculus (சிறியகல்) என்ற இலத்தீன் சொல்லினடியாகப்பிறந்தது. Cal என்ற சொல் தமிழ்க்"கல்" ஆகும். Culus என்பதோ; குழவு (சிறியது) என்ற தமிழ்ச்சொல்லடியாகத் தோன்றியதாகும்.

"குமாரா - (1) கு+மாரா - (ம்ரி) - விரைவில் சாகாமை. (2) கம்-குழந்தை. பையன். இளைஞன்."

குமாரா என்பதைக் கு+மாரா என்று பிரிப்பது சொற்சிதைப்பாகும் 'கும்' (வீங்கு) என்ற வேரடியாகப்பிறந்த குமரன் (இளைஞன்) என்னும் தமிழ்ச் சொல்லின் மாற்றப்பட்ட வடிவமே குமாரா என்பது.

மேலும் சமற்கிருத ம்ரி என்பதாலும் தமிழ் 'மடி' (இறத்தல்) எனும் சொல்லின் சிதைவேயாகும்.

"நிலய - நிலீ. நி - கீழே; லீ - பற்றிக்கொள். லயா - பற்றிக் கொள்ளல்" நிலையம் என்பது 'நில்' அடியாகப்பிறந்த தமிழ்ச்சொல். நிலை–தொழிற்பெயர். நிலையம்–தங்குமிடம்.

"மயூர மா - ஓசையிடு, முழங்கு. - ஓசையிடும் புள் - மயில்". மயூர என்பது தமிழ் 'மயில்' என்பதன் திரிபு. மயில்–மை + இல். மை-கருமை. இல்-புள்ளி. கரும் (கருநீலப்) புள்ளிகளையுடைய பறவை.

"வடபா (படவா, படபா) - பெண்குதிரை, பெண்குதிரையின் தோற்றமுடைய, ஆண்குதிரை. வடபாக்கினி, - பெண்குதிரையின் நெருப்பு. - பெண்குதிரை முகம்போன்ற முழையினின்று வெளிவருவதாகக் கருதப்படும் கீழுலக நெருப்பு. வடபமுகா - பெண்குதிரைவாய்.- தென்முனையின் தாழ்ந்த பகுதிகளின் நுழைவாயில்."

இவ்விடத்தில்தான் மோனியர் வில்லியம் அவர்களின் முட்டுப்பாடு மிக எளிதில் வெளிப்படுகின்றது. இந்திய சமற்கிருத வாணர்கள் வடவை என்னும் தமிழ்ச் சொல்லுக்கு வடமொழித் தோற்றம் கூட்டுவதற்காக என்னவெல்லாமோ கோமாளி விளையாட்டுகள் விளையாடியுள்ளனர்.

'வடபா', என்பது 'வடவை' என்பதன் திரிபு என்பதில் ஐயத்துக்கிடமில்லை. வடம்–வடக்கு. வடவை. வடக்கிலுள்ள அனல். - வடவனல் என்றும் பெயர். வடமுனையிலுள்ள நெருப்பு (Aurora Borealis).

"சிரிங்கவேரா (இஞ்சி) சிரிங்க–கொம்பு. வேரா - உடல், வடிவம்" - மான்கொம்பைப் போன்ற வடிவமுடையது.

போலித்தனமான சொல்லாராய்ச்சி!

இஞ்சி, இஞ்சிவேர், இஞ்சிக்கிழங்கு, இஞ்சிப்பாவை என்பன தமிழ் வடிவங்கள். இஞ்சிவேர் என்னும் சொல்லே கிரேக்க மொழியில் சிஞ்சிபெரிஃச் (Ziggiberis) சிஞ்சிபேர் (Zingiber) என்றாகி, இலத்தீனில் (Gingiber) என்றாயிற்று. ஆங்கிலத்தில் Ginger எனச்

சுருங்கியது. ஆனால் வடமொழியாளர் இதனை ஒப்புக்கொள்ளாது திருக்குத் தனமான சொல்லாய்வுகளை மேற்கொள்ளுகின்றனர். இஞ்சி வேர். – இஞ்சி+வேர். இஞ்சி என்பது 'இஞ்சு'-(உறிஞ்சு, உள்ளிழு) என்பதனடியாகப் பிறந்தது.

''சாயா–அழி. கொல்–எனவே நாளின் இறுதி வேளையான மாலை''.

மாலைக்குப் பொதுவாக வழங்கும் தமிழ்ப்பெயர் சாயுங்காலம். (– பொழுது சாயும் (– மறையும்) வேளை.) சாய்ங்காலம், சாயங்காலம் எனத் திரிந்து வழங்கும். இத்திரிபு வழக்கையே வடமொழியாளர் பற்றிக் கொண்டு 'சாயம்' என்பதைப் பிரித்துப் பெயர்ச் சொல்லாக் கருதி வடமொழியில் மாலை எனும் பொருளில் வழங்குகின்றனர்.

''சுபர்ன அழகிய இலை. இலைபோன்ற அழகிய சிறகுகளையுடையது. – பருந்து அல்லது கழுகு. – அழகிய கதிர்களையுடையது எனும் பொருளில் கதிரவனையும், நிலாவையும் குறிக்கும்.''

'உ' என்னும் சுட்டு உயரத்தைக் குறிக்கவும் தமிழில் வழங்கும். உக – உயர இரு. உகள் – உயரத்தாவு. உச்சி – தலையின் முகடு. உம்பல் – உயர்ந்து வளரும் யானை. உன்னு – பாய்ந்தெழு. உவர் – உப்பு மண் – பொங்கி மேல் எழுவது. உவணை – உயர் இடம், வானுலகு. உவணம் – உயரம். வானம். வானில் உயரப்பறக்கும் கழுகு அல்லது கலுழன். உவணம் என்பது மொழியியல் விதிப்படி சுவணம் என்றும் ஆகும். சுவணம் என்ற சொல்லே சுபர்ன என்னும் சமற்கிருதச் சொல்லின் மூலமாகும்.

'உ' 'சு' ஆதற்குச்சில எடுத்துக் காட்டுகள்.

உதை – சுதை – உதைக்கும் பால் மாடு.

உருள் – சுருள் –, உழல் – சுழல், உலவு – சுலவு (சுற்றிவா).

மிகத்தெளிவாக வேற்றுச் சொற்கள் என்று தெரிந்த விடத்துத்தானும் மோனியர் வில்லியம் அவற்றைப்பற்றிய விளக்கங்களைத் தெரிவிக்காமலே விட்டுச் செல்கின்றார். எ. டு: ''அக்கா (தாய். (வெறுப்பாகப் பயன்படுத்தப்படுவது) வேற்றுமூலம் உடையதாகக் கொள்ளப்படுகிறது. இலத்தீன் – ஏகா; அத்த – தக்கணத்தினின்று பெறப்பட்ட வழக்கு

வடிவமாக இருத்தல் கூடும். சிறப்பாக நாடகங்களில்தான் வழங்குவதாகக் கூறப்படுகின்றது. – தாய், தாயின் உடன்பிறந்தாள் –முத்தாள். பிராகிருதத்தில் – மாமியார்."

இவ்வாறு, இந்திய நாகரிகம் அனைத்தும் ஆரிய அடிப்படையினதே என்று கருதிவிட்ட இந்த மாக்சு முல்லர் கூட்டம் எளிய வேத ஆரியர்களின் சிறிய தலைமேல் தாங்க முடியாத பெருஞ்சுமையைத் தூக்கி வைத்துவிட்டது!

## திராவிடச் சொற்பிறப்பியல் அகர முதலி:

மேலை நாட்டில் இன்று சிறந்த கீழ்த்திசையியல் வல்லுநராகத் திகழும் பேரா. பரோ என்பார் தம் அகர முதலியில் பல தமிழ்ச்சொற்கள் வடசொற்களினின்று பிறந்தவைபல்ல என்று நிலை நாட்டியுள்ளார். ஆயினும் அவரும் தமிழின் தன்மையை முழுதும் உணராமையால் சில பிழைகள் செய்துள்ளார். எ: டு:. ஆயிரம் என்ற தமிழ்ச்சொல் சகஸ்ரம் என்ற வடசொல்லடியாகப் பிறந்தது என்கிறார். இது பிழை. ஆய் – கூர்மை. அயில் - கூரிய வாள். அயில் – அயிர்–நுண்ணிய மணல். அயிரை – மணலில் புதைந்து கொள்ளும் ஒருவகை மீன்.

அயிர் + அம் – ஆயிரம். மணல், எண்ணிக்கை மிகுதியைக் குறிக்கும் ஒரு பொருள். இதனடியாகப் பிறந்ததே எண்ணிக்கையைக் குறிக்கும் ஆயிரம். எடுத்துக்காட்டு: நூறு – (பொருள்) துகள்,மாவு (சிதைத்தல் அழித்தல்) எனும் பொருளடியாகப் பிறந்தது.

யகரம் சகரமாகத் திரிவதும், உயிர் முதற் சொற்கள் சில உயிர்மெய் முதலாகத் திரிவதும் தமிழில் நேர்வனவே. எனவே 'ஆயிரம்' கன்னடத்தில் சாசிர என்றும் சாவிர என்றும் ஆகும்.

சகர, யகரத் தொடர்பு மொழியியல் அடிப்படையினதே.

– ஏவு – ஏசு; – பரவு - பரசு; விரவு - விரசு.

துளு கன்னடத்தைப்பின்பற்றிச்சாவிரி என்பதைச்சார என்று சுருக்கிக் கொண்டது. சகஸ்ர என்னும் வடசொல் சாசிர என்ற கன்னட வடிவினின்றோ அல்லது இறுதியின் மூலமான ஞரசேனியில் வழங்கும் ஹசார் என்பதினின்றோ அமைந்திருத்தல் வேண்டும். ஹசார் என்பதும் தமிழ் ஆயிரத்தின் திரிபேயாகும்.

தமிழில் ஆயிரத்தைக் குறிக்க வேறு சொல் இல்லை என்பதும், சகஸ்ர என்ற சொல் வரலாற்றைபற்றி சமற்கிருதத்தில் பேச்சே இல்லை என்பதும் மனத்தில் வைக்கத் தக்கன.

பேரா. பரோ, தமிழ்ச்சொற்கள் வடசொல்லினின்று திரிந்தமையும் போது முதனிலை கெட்டு வழங்குவன என்பார். இஃது ஒருசார்பானது. எவ்வாறெனில், முதலில், சொற்கள் முதனிலைகெட்டும் வழங்கும். புதியதோர் அசை சேர்க்கப்பெற்றும் வழங்கும். இதனை அவர் கவனித்தாரல்லர். அதோடு, பல தமிழ்ச்சொற்களின், வேர்ப்பொருளை அவர் அறியாமல் ஆடை, ஏணி, சடை போன்ற சொற்கள், சாடா, சிரேனி ஜடா என்ற வடசொற்களே என்று குறித்துள்ளார். இப்பிழைகளை விளக்கவேண்டியதில்லை.

வடமொழியில் மட்டுமல்லாது, பிற ஆரியக் குடும்ப மொழிகளிலும் பலசொற்கள் தமிழ்ச் சொற்களுடன் முதனிலையில் புதிய எழுத்தசை சேர்க்கப்பெற்று வழங்குகின்றன.

| | | |
|---|---|---|
| எடு: | தமிழ் | ஆரியம் |
| | தூண், தூணம், | ஸ்தூணு (சமற்கிருதம்) |
| | மயிர் | ஸ்மசுரு ,, |
| | நாகம் | ஸ்நேக். (இடைக்கால செருமானியம் ஆங்கிலம்) |
| | | ஸநாகா – பழைய ஆங்கிலம். |
| | மெது | Smooth (ஆங்கிலம்) |
| | உம்பர் | Super. (இலத்தின்) |

தமிழில் 'நாகம்' எனுஞ் சொல் 'நகர்' எனும் சொல்லினின்று தோன்றியது. Snake எனும் ஆங்கிலச் சொல்லும் நகர் என்று பொருள்படும் snican என்ற சொல்லினின்று தோன்றியதே.

## இந்துசமயம் என்பது யாது?

தமிழரின் பழம்பெருஞ் சமயங்களான சைவம், வைணவம் ஆகியவற்றுடன் பிராமணர்க்குரிய பிரமன் வழிபாடும் கலந்ததே இந்து சமயம் ஆகும். வேத ஆரியரின் சமயம் பல சிறு தெய்வங்கட்குக் காவு கள் பல வழங்கும் விரிந்த ஏற்பாடுகள் பலவற்றை அடக்கியது. இத்




அச்சாகு நூலெல்லாம் நூலாமோ? ஆங்கு சிலர்
மெச்சியுரை செய்வதனுல் மேலாமோ? – முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோருய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு!

## காதல் நெஞ்சம்

ஆக்கியோன்: புதுவை சுப்பிரமணியன்.
கிடைக்குமிடம்: தமிழ்நூற் பதிப்புச்சங்கம்,
34, புய்சி வீதி, புதுச்சேரி-1.
விலை உருபா: ஒன்று.

தென்மொழியில் அவ்வப்பொழுது வெளிவந்துள்ள இந் நூலாசிரியரின் பாடல்களைப் படித்தபின்பு இப்பாடல்களைப் படிக்க நேரிடுகையில் ஏமாற்றமே கிட்டுகின்றது. காதல் துறை என்று தனிப் படுத்திக்

---

முன்பக்கத்தொடர்ச்சி:

தெய்வங்கள் அதன்முன் இந்தியாவில் உள்ளவை அல்ல. வடஇந்தியாவிலுள்ள திராவிடச் சைவர்களை ஆரியர் 'சிசினதேவர்' என்று இகழ்ச்சியாகவே கருதினர். ஆயினும், தம் பல தெய்வ வழிபாட்டினும் திராவிடரின் ஒரு தெய்வ வழிபாடு சிறந்ததென்றும், திராவிடரைத் தம் வேதச் சமயத்துக்கு இழுத்துக் கொள்ளமுடியாது என்றும் ஆரியர் விரைவில் புரிந்து கொண்டனர். எனவே தாங்கள் சைவ வைணவத்தைத் தழுவியதோடு தங்கள் பிரம்ம வழிபாட்டினையும் அவற்றுடன் இணைத்து அனைத்தையும் ஆரியத்தன்மை வாய்ந்ததாக மாற்றிக் கொண்டனர். தமிழரைப் பிரமனின்பால் ஈடுபடுத்த எண்ணியே பிரமன் திருமாலின் உந்தியிற்பிறந்தவன் என்றனர். சிவனை உருத்திரன் என்ற தங்கள் கடவுளோடு இணைத்தனர்.

''விட்டுணு'', விண்டு அல்லது மாயோன் என்றும் திருமால், பெருமாள் என்றும் தமிழரால் அழைக்கப் பெற்றான். தமிழ் விண்டுவுக்கும், வேத ஆரியரின் விட்டுணுவுக்கும் தொடர்பில்லை. (வளரும்)

கொண்டு அதில் ஏதாவது சொல்லியாக வேண்டுமே என்று கருதிப் பின்பு எழுதியதால்தானோ என்னவோ பெரும்பாலான பாடல்கள் சுவைக்கவில்லை. வலிந்த முயற்சியாகத் தோன்றுகின்றது. பழகிப் போன, பொதுநிலையான (ordinary) எண்ணங்களே "காதல் நெஞ்ச"த்தில் காணக் கிடக்கின்றன. ஐயம், மாற்றம், நெஞ்சம் அவன்பால், ஊடல்முனிவு, இறக்குமுன் வந்துபார் போன்ற ஒருசில பாடல்களே கவனத்தை ஈர்க்கின்றன.

உள்ள உணர்வும் உடலுணர்வும் கலந்தியல்வதே காதல் என்றாலும், உடலுணர்வு பற்றிய செய்திகளைப் பாட்டில் கையாள்கையில் மிக விழிப்பாக இருத்தல் வேண்டும். காதலன் ஒருவன் காதலியின் பால் தன் வேட்கையைப் புலப்படுத்தி நிற்றல் உண்மையே என்றாலும், அக் காதலன் தன் காதலி மாட்டுச் சிறப்பாக நுகரும் ஐம்புலனின்ப வேட்கையை அவட்குக் குறிப்பாகவும் நுணுகவும் உணர்த்துவனவாக அவன் சொற்கள் அமைதல் வேண்டுமேயல்லாமல், பொதுவாகப் பெண்ணுடலின் வாளிப்பைக் கண்ட ஆண்மகன் பித்து மேலிட்டு உளறும் சொற்களாக அமைந்துவிடல் கூடாது. "கட்டுக் குலையாதமேனி-அது கண்டார் விழிகளுக்குத் தீனி" என்று தான் விரும்பும் பெண்ணை எண்ணிக் கூறும் ஒருவன் பண்புடைய காதலன் ஆகான். அதோடு காதற்பாடல் என்றால் உடலுணர்வுதான் மேலோங்கி நிற்றல் வேண்டும் என்பது கட்டாயமுமன்று. காதற் பாடல் என்ற உரிமையில் இலை மறை காயான இடங்களையெல்லாம் வெளிப்படக் காட்டுதற்கும், தொடாத இடங்களையெல்லாம் தொட்டுப்பார்த்து விடுதற்கும் பட்டயம் (licence) கிடைத்து விட்டது என்று நினைப்பது பிழையாகும். மேற் கூறிய நிலைகளில் 'காதல் நெஞ்சம்' குறைபுடையதாகின்றது. 'கதவு திறந்தது' என்ற பாடலை எடுத்துக்காட்டாகக் கூறலாம். காதலன் தன் காதலிமாட்டு எவ்வளவுதான் வேட்கை மீதூரப்பெற்று நின்றாலும் நான்குபெயர் முன்னிலையில் அவளிடம் சுவைக் குறைவாக நடந்து கொள்ளமாட்டான். காதற்பாடல் என்பதும் அப்படித்தான் இருத்தல் வேண்டும்.

இன்று வெளிவரும் புற்றீசல் நூல்களைப்போல் அல்லாமல் பாடல்கள் மொழிச் செப்பமும் தனித்தமிழ்ப் போக்கும் வாய்ந்து பிழையின்றி அமைந்திருப்பது நன்றேயாம்

'கல்லாடன்'

## 'முல்லைக் கொடி'

(சிறுபாவியம்)

ஆக்கியோன்: த. பகவதிபாண்டியன். (மாறதாசன்)
கிடைக்குமிடம்: சீவோதயம் வெளியீடு. சூளைமேடு, சென்னை-24.
விலை: 60 காசு.

மயிர் மழித்தல் தொழிலை ஒருவன் சரியாக நடத்துவதற்குக்கூட அவனுக்கு நெடுநாட் பயிற்சி வேண்டியுள்ளது. ஒவ்வொரு தொழிலிலும் அந்த அந்தத் தொழிலில் பயிற்சிபெற்றுத் தேர்ந்தவரே ஈடுபடல் வேண்டும் என்பது எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்டதாகவும் நடைமுறையில் உள்ளதாகவும் இருந்து வருகின்றது. ஆனால் மக்கட்கு அறிவும் உணர்வும் கொளுத்தும் இலக்கியத்துறையில் மட்டும் எவர் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் புகுந்து விளையாடலாம் என்ற நிலை இத்தமிழகத்தில் ஏற்பட்டிருப்பதுதான் வருந்துதற்குரியது. முல்லைக்கொடி என்ற இச் சிறு சுவடிக்கு நூலென்று கூறத்தக்க எந்தத் தகுதியும் இல்லை. கருத்திலோ யாப்பிலோ எவ்வகை உயர்வும் இல்லை. நூலெழுதிப் பெயர்பெற வேட்கை இருந்தால் மட்டும் போதாது. அறிவையும், உணர்வையும் கலைத்திறனையும் உண்மை நெஞ்சோடும் இடையறு உழைப்போடும் அரிது முயன்று சேர்ப்பவர் தாம் தம் உழைப்பின் பயனை நூல் வடிவில் மக்கட்கு வழங்க முடியும். அம்முயற்சி இல்லாதார் இவ்வாறு வெற்றுநூல் பகர்வதால் யாருக்கும் பயன் இல்லை.

—கல்லாடன்

## பாமாலை

கிறுக்கியவர்: அ. பாதுர் சா. (தமிழ்வண்ணன்)
கிடைக்குமிடம்: பறக்கைப் பாதை. கோட்டாறு, குமரிமாவட்டம்.
விலை: 10 காசு.

தற்காலத்து மக்கள் உள்ளங்களைக் கெடுக்கும் இழிந்த திரைப்படப் பாடல்களின் இசையை அடியொற்றி எழுதப்பட்டவை இவை புளித்துப்போன முறையில் நாட்டுத்தலைவர்களின் புகழ் பேசப்பட்டு உள்ளது. இவற்றைப் பாட்டென்றழைக்கவும் நா கூசும். அறிவாலும் உணர்வாலும் சிறிதேனும் வளர்ச்சி யடையாதார் அவற்றை வளர்ப்பதை விட்டுவிட்டுக் குறுக்கு வழியில் புகழ்தேட முனைந்தால் இத்தகைய இழிநூற்கள் தாம் வெளிவரும். தங்கள் தினவுக்கு எப்படியாவது கிறுக்கித் தொலைத்துக் கொள்ளட்டும். அச்சேற்றியும் பார்த்துக் கொள்ளட்டும். ஆனால் அவற்றை நூலென்று விலையிட்டுத் தென்மொழியின் "நூல்நிறை"க்கும் விடுத்து விடுகின்றனரே; இவர்தமை என்னென்பது!

—"கல்லாடன்"

ஆங்கில மொழியாக்கம்

## THE RIVER

BARATHIDASAN.

A long, low-lying path I came across, the two sides of which were lined with high bunds of earth. The path was full of sand-the sand grains so fine as the falling pollen of the screw-pine blossoms. The stretch of sand was bathed in sunlight.

The sand was hot. The passers by treading the uneven path invariably made for the thick shades of trees that stood on the bund, to soothe their burning feet. Standing there, they look at the road and the village lying beyond. The winding river-path cutting across the beautiful land scape looked like a rain bow.

The air was hot and enervating and now a cold wind suddenly blew. The tender shoots were shaken gently into life. Strangely enough, birds came from nowhere in no time and perched on the cluster of trees.

I heard a socend. It was the sound of approaching flood. Presently I saw the oncoming floods. What a colourful sight it was! There was a combination of the colour of fire, the colour of the moon and that of the sun beam from the high heavens. The reign of Summer was thus overthrown by the revolution of the floods.

The sand banks collapsed at the impact of the onrush-ing water-like an elephant attacked by a huge lion collaps-ing. And there! the banyan tree on the sand is uprooted.

It falls head long into the river. Kites fly over the water and the "Valai" in the water draws its sword.

The bovine grazing on the fields nearly begin to think of their duties. The little boys put their ears to the ground and hear the rumbling sound of the approaching flood. They clap their hands and shout to their elders in their drawl voices.

The curving banks brimming with water have rims of gold and the foam-deposits are like sheets of pearl. The king-fisher turning swiftly round is a flash of emerald. The stork perching on the floating trees is like a white flower of the screw-pine. And there is no comparison to the joy of all these things.

Like a uniformed army in rank and file charging suddenly on the enemy, the fresh floods arrive roaring at night. The trees on both sides of the river seem to say a mendal prayer lest they should fall, and extending their arms-the branches-they scatter blossoms.

The village folk come there to see the flooding river and they are happy over the fresh floods. They exclaim many a word of praise and welcome. Then they rush with the swiftness of the wind and open the little irrigation channels into their fields. They shut up all the outlets too.

There is a hundred percent freedom from poverty and cure from disease. There is no rest for farmers who start carrying their ploughs and singing plough songs. Mother River walks with joy-her anklet-feet singing-at the happiness of her children. The world be fertile-fertile she sings.

பெயர்ப்பு: ம. இலெ. தங்கப்பா.

# உங்கள் மொழிப் பற்றிற்கு ஓர் உரைகல்

'குயில்'

கீழே காணப்பெறும் வினுக்களுக்கு 'ஆம்' அல்லது 'இல்லே' என்று மட்டும் விடையளியுங்கள்.

1. கையொப்பம் இடுங்கால் எந்த நிலேயிலும் எந்த இடத்திலும் தாய்மொழியிலேயே இடுகின்றீர்களா ?

2. பெயரெழுதுங்கால் பெயர் எம்மொழியில் எழுதப்படுகின்றதோ அம்மொழியிலேயே முன்னெழுத்து (INITIAL) இடுகின்றீர்களா?

3. உங்கள் பேச்சிலும் எழுத்திலும் பிறமொழிச் சொற்களே (அறிந்தே) கலப்புச் செய்கிறீர்களா ?

4. பிறமொழிச் சொற்களேக் கையாள நேருங்கால் தாய்மொழியின் இயல்புக் கேற்ப ஒலிப்பிண மாற்றிக்கொள்கின்றீர்களா ?

5. உங்கள் தாய்மொழிப் புலவரின் பொன்மொழியைவிட, பிற மொழிப் புலவரின் பொன்மொழியை மேற்கோள் காட்டினுல் உங்கள் கருத்து வலியுறும் என்று கருதுகிறீர்களா ?

6. தாய்மொழி யறிந்த ஒருவர்க்குப் பிறமொழியில் மடல் வரைகின்றீர்களா ?

7. தாய்மொழியைப் புரிந்துகொள்ளக் கூடியவர்களிடம் பிற மொழியில் பேசுவதைப் பெருமையாகக் கருதுகிறீர்களா ?

8. உங்களுக்குப் பிடிக்காத ஒருவர் உங்கள் தாய்மொழியினிடம் பற்றுதல் உள்ளவராக இருக்கிருர் என்று கொள்வோம். அவர் மொழிவளர்ச்சி கருதிக் கூறும் நல்ல கருத்துகளே எதிர்ப்பீர்களா ?

9. உங்கள் தாய்மொழியைப் புறக்கணிப்பதால் வாழ்வதற்குப் பொன், ஆள்வதற்கு மண், சூழ்வதற்குப் பெண் முதலியன கிடைப்பின் அவற்றை ஏற்றுக் கொள்வீர்களா ?

10. தமக்கும் தாய்மொழிப் பற்று உண்டென்று நாப்பறை சாற்றிக் கொண்டு, உண்மையான பற்றுளர்களேப் பகடி செய்து அவர்

களுடைய நன் முயற்சிகட்கு இடையூறு செய்பவர்களை மாந்த ரினத்தவராகக் கருதுகின்றீர்களா ?

## முடிவு

1, 2, 4 ஆகிய வினக்களுக்கு உடன் பாட்டிலும் 3, 5, 6, 7, 8, 9, 10 ஆகிய வினக்களுக்கு எதிர் மறையிலும் விடைவரின் ஒவ்வொன்றிற்கும் 10 மதிப்பெண் இட்டுக் கொள்க.

கூடுதல் 100 வருமாயின் நீங்கள் தாய்மொழிப் பற்றும் தன்மானமு முள்ள மாந்தரே.

கூடுதல் 70 க்கு மேல் வரின் இனிவருங்காலத்தில் மாந்தராகலாம் !

70 க்குக் குறைந்தால் நீங்கள் … … … … … ?

(மாந்தராக முயல்க)


## தென்மொழி, கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள் நாடு | கொழும்பு | வெளி நாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | 6 உருபா | 7-25 உருபா | 9 உருபா |
| தனி இதழ் | 50 காசு | 60 காசு | 75 காசு |

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

| | | |
|---|---|---|
| அட்டை நான்காம் பக்கம் | (இரு வண்ணம்) | 100 உருபா |
| ,, ,, | (ஒரு வண்ணம்) | 75 உருபா |
| உள்ளே முழுப்பக்கம் | | 50 உருபா |
| ,, அரைப்பக்கம் | | 25 உருபா |

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனை யாளர்கள் எழுதிக் கேட்க.

# தமிழரின் கீழ்மைப் பண்புகள்

புலவர். தி. நா. அறிவுஒளி.

உயர்தனிச் செம்பண்புகள் கொண்ட தமிழினத்தின் பிறங்கடையினரான நிகழ்காலத் தமிழரின் கீழ்மைப் பண்புகளை எண்ணும்போது நாணித் தலைகுனிவதுடன் ஆற்றாஅவலமும் மிக்கெழுகிறது. உயர்ந்த பண்புடையோரின் வழித்தோன்றலர் தாமா இத் தமிழர்கள் என ஐயுறவும் நேரிடுகிறது.

தூய்மை, ஒழுக்கம், பண்பாடு, அறவுணர்வு, பெருமானம். பெருமிதம், தனித்தன்மை, நெறிவாழ்வு, தன்னலம் பேணாப் பிறர் நலம் பேணுமியல்பு, கற்பொழுகலாறு, பெண்மை, பிறர்மனை நோக்காப் பேராண்மை, நாணம், மடம், பயிர்ப்பு, அஞ்சுவதஞ்சல், நடுநிலை, வாய்மை, நேர்மை என்றின்னோரன்ன தெய்வ இயல்புகளையே கடைப்பிடித்தொழுகி வந்த இனம், இவற்றின் தடம் மாறிச் சென்றமையோடு அமையாமல், இந்நல்லொழுகலாற்றுக்கு முரணானதும், வெறுக்கத்தக்கதும் பழியொடுபடர்வதுமாய இயல்புகளைக் கடைப்பிடிக்குமளவுக்குக் கடையராய்க் கெட்டழிந்த கீழ்மை உள்ளுதோறும் பெருஞ்சீற்றத்தையும் ஆற்றாமையையும் உண்டாக்குகிறது.

தன்னலத்தைப் பேணுவதில் தலைசிறந்த முதற்பரிசைத் தமிழரிற் பலர் தட்டிச் செல்வர்! அவ்வளவு முற்றிய தன்னல நோயாளிகள் தமிழ்நாட்டில்தான் உள்ளனர். இந்த அழகில், பொதுநலப்போர்வையில் திரியும் தன்னலவேங்கைகளுக்குக் கணக்கு வழக்கே இல்லை! தம் வீட்டு நலனுக்காகவும், தம் பதவி வெறிக்காகவும் நாட்டு நடப்பில் முதன்மை தாங்குவோர் பலருளர். இவர் தம் உண்மை நோக்கம் உணராதார் பலர். அன்னாரால் பெறும் நனிசிறு நன்மைகள், சிறு அன்பளிப்புகளில் மதிமயங்கி, அவரைக் 'கண்கண்ட கடவுளாய்' வழி படுவதைக் காணும்போது கழிவிரக்கம் கடலினும் பெரிதாகின்றது.

மெய்யெல்லாம் பொய்யாகி மிளிர்பவரும், பொய்யையே மெய்யாக்கி மயக்குபவரும், நாகரிகம் என்ற சொல்லைப் பயன்படுத்தி நாகரிகமின்மையை வளர்ப்பவரும், பொதுமை வாயால் பேசிப் பிறரை ஏமாற்றித் தாம் பொதுமையை நம்பாது வயிறு வளர்ப்போரும், கொள்கைகளையும் நோக்கங்களையும் சில்லறைபாகவும், மொத்தமாகவும் விற்போரும் கலையின் பெயரால் கயமையைக் கடைபரப்பு வாரும் எத்தனை கோடியர் உளர்! அவரவர் தத்தம் நிலையை எடுத்து விளக்கும் போது நேர்மையின் நெடுங் கோயிலாகவே பேசிக்கொள்கின்றனர்!

பிறனுக்கு மறைவாகவோ வெளிப்படையாகவோ-கேடு சூழ முன் வராத தமிழரை விரல் விட்டு எண்ணிவிடலாம். அகவையால் பெரியோரான பலரிடம் 'பெருந்தன்மை' யின்மையை மிகத்தெளிவாகக் காணும் போது நரைத்த மயிர்போல், உள்ளமும் நரைத்தவர்களாக இருக்கிறுர் களே என வருந்த வேண்டியுள்ளது. பிறர் எதை எதைத் தனக்குச் செய்யக்கூடாது என எண்ணுகிறுர்களோ; அவற்றைப் பிறர்க்குத் தாமே செய்யப் பின் வாங்காத பேதையர் தமிழர்தாம் இன்று! தன் குற்றத்தைத் தானே உணர்ந்தாலும், பிறர் உணர்த்திலுைம் தமிழன் அதை ஒப்புக்கொள்ள மாட்டான். ஒப்புக் கொண்டாலும் உடனே திருத்திக் கொள்ளமாட்டான்; திருந்த வியலாமைக்கு வருந்தவும் துணியான்! உண்மையை ஏமாற்றுவதில் உலகிலேயே ஒப்பற்ற இனம் தமிழினமே!

யாராவது உதவி செய்யமுன்வருவது தெரிந்தால் ஏழைத் தமிழர்கள் உதவியாளன் ஓட்டாண்டியாகும் வரை சுரண்டி விடுவர்; வாய் நன்றி கூறக்கூட விரும்பமாட்டார்கள்! போலிமானம், போலி மதிப்பு, போலித்தகுதி, போலிச் சடங்குகள், போலிப் பழக்கங்கள், போலி வாழ்வு நடத்தைகள் ஆகிய போலிமைக்கே வாழ்வடிமைப்பட்டு வருந்தும் மடவர் கூட்டம் இக்கால் தமிழர் கூட்டமே!

ஒருவரையொருவர் சொல்லாடலிலேனும் கீழ்வெட்டாகப் பேசி வீழ்த்தி மகிழ்வதும், இப்போலி வெற்றியால் செருக்குவதும் இளையரிடம் இஞ்ஞான்று மிகுதியாகக் காணப்படும் பழக்கமாகவுள்ளன. இக் குறையைச் சுட்டிக்காட்டிடினும், நம்மை எள்ளிநகையாடிப் பொருட் படுத்தாது செல்லுமளவுக்குப் 'பொழுது போக்கி'களாகத் தமிழிளைஞர் தகுதி குன்றிவிட்டனர்.

'திருப்புகழ்'பாடி, செல்வர்,அரசியற்றலைவர், அதிகாரி, அமைச்சர் முதலியோரைக் கைக்குள் 'போட்டுக்'கொண்டு, பலர்க்கு அச்சத்தையும் சிலர்க்கு அவலத்தையும் ஊட்டி, நச்சினுர்க்கினியராகவும் அடியார்க்கு நல்லாராகவும் திகழும் குள்ள உள்ளத்தினர் பரவி வருகின்றனர்.

திட்பம் தனிவாழ்விலும் பொதுவாழ்விலும் தேய்பிறையாகி வருகிறது. திட்பத்தின் வீழ்ச்சி திசைமாறித் 'திட்பவாழ்வு' தமிழகத்தில்

(42ஆம் பக்கம் பார்க்க)

முன்னிதழ்த் தொடர்ச்சி.

# முதல் புரட்சி

க. ப. அருணாசலம், கீ. க. தே (பி. ஓ. எல்)
தமிழ் ஆராய்ச்சித் துறை,
திருவனந்தபுரம்.

தமிழகத்தில் கழகக்காலக் கடைப்பகுதியில் தமிழகம் ஆரியமாகத் தொடங்கிவிட்டது. மறத்தினையே பேசி, அதனையே விரும்பி வந்த தமிழினம், கடவுளர்களோடு பேரம் பேசத்தொடங்கியது, சமயம் எனும் களை தோன்றாத தமிழ்நாட்டில் சமயமே தலைமை பெற்று ஆளத் தொடங்கியது; தூய 'அறத்தை'ப் போற்றிய தமிழினம் புதிய 'தரு மத்தை'ப் பேசலானது; 'யாயும் ஞாயும் யாராகியரோ? எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?' என்று காதல் வாழ்வு நடத்திய இனம், 'மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத் தீவலம்' வந்தது; பகுத்துணரும் அறிவும் ஆற்றலும் கொழித்த நாட்டில் பழங்கதைப் பொய்கள் பொங்கி வழியலாயின; தமிழ்மக்களின் போர்த் தெய்வம் ஆகிய கொற்றவை 'துர்க்கை' என்னும் ஆரியத் தெய்வத்துடன் கலந்தாள்; மால் 'விட்டுணு வானார்; மன்னன் 'ராஜா' வானான்; அமைச்சன் 'மந்திரி' யானான்; அரசு 'ராஜ்ய' மாயிற்று; இன்னிசை 'சங்கீதம்' பாடலாயிற்று; மன்னர்கள் ஆரியர்களைப் போற்றினர்; 'அவர் சொற்படி வேள்வி யாற்றினர்; 'பார்ப்பார்க்கு அன்றிப் பணிபு அருந் திலையே' என வந்தேறிகள் மன்னர் முன்னேயே பாடினர்; தமிழ் மன்னர் ஆரியரின் கைப்பாவைகளாகி விட்டனர்; பண்பாட்டளவிலும், பழக்க வழக்க அளவிலும் வடநாடு இருந்து தென்னாடு போந்த ஆரியரால் தமிழகம் நிலை குலைக்கப்பட்டது. நிலை குலைந்த தமிழகத்தை நிலை நிறுத்தவும், கலப்புப் பண்பாட்டிற்கு அணைபோடவும், தம் தாய் மொழியாகிய தமிழுக்கு அரண் கட்டவும், வேள்வி நெறியில் போய் மன்னரும் மக்களும் தடுமாறும் நிலையைத் தடுத்து நிறுத்தவும், குல முறைகள் பெருகித் தம்முட் கலாம் விளையும் போக்கை ஒடித்து வீழ்த்தவும், இத்தனைக்கும் காரணமான "வேத", "யாகப்" பார்ப்பனர்களின் வல்லாண்மையை ஒடுக்கவும்—கி. பி. 3ஆம் நூற்றாண்டில் ஒரு பண்பாட்டுப் புரட்சி ஏற்பட்டது; அப்புரட்சியைச் செய்தவர் யார்?

## iii வேள்விக்குடிச் செப்பேடு வழங்கும் வரலாற்று உண்மை:

கி. பி. 765-790 வரை ஆண்ட பாண்டிய மன்னன் நெடுஞ்சடையன் பராந்தகன் ஆவான். அவன் காலத்தில் வெளியிடப்பட்ட ஒரு

செப்பேடே வேள்விக்குடிச் செப்பேடு ஆகும். அச்செப்பேடே கி. பி. மூன்றும் நூற்றாண்டில் தமிழக வரலாற்றில் நடந்த புரட்சியை எடுத்துக்காட்டுகிறது. முதலில் கழகக்காலப் பாண்டியனுப பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி எனபான், வேள்வி செய்ததற்காகக் கொற்கைக் கிழான் நற்கொற்றனுக்குப் பாகனூர் என்ற ஊரை வேள்விக்குடி எனப்பெயரிட்டுக் கொடையாகக் கொடுத்ததையும், பின்னர் 'களப்பிரர்' என்ற ஓர் இனத்தவர், வேள்விக்குடி என்ற அவ் வூரைக் கைப்பற்றிக் கொள்ள, அந்தக்கொடையும் தவிர்க்கப்பட்டது என்பதையும் அச் செப்பேடு உணர்த்துகிறது.

செப்பேடு வருமாறு:

'கொல்யானை பலவோட்டிக் கூடாமன்னர் குலாம் தவிர்த்த
பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டியாதிராஜனால்
நாகமாமலர்ச் சோலை நளிர்சினைமிசை வண்டலம்பும்
பாகனூர்க் கூற்றம் என்னும் பழனக் கிடக்கை நீர்நாட்டுச்
சொற்கண்ணாளர் சொலப்பட்ட சுருதி மார்க்கம் பிழையாத
கொற்கைகிழான் நற்கொற்றன் கொண்ட வேள்வி முற்றுவிக்க
கேள்வி அந்தணாளர் முன்பு 'கேட்க' என்று எடுத்துரைத்து
வேள்வி சாலை முன்பு நின்று 'வேள்விகுடி' என்று அப்பதியைச்
சீரோடு திருவளரச் செய்தார்; வேந்தன், அப்பொழுதேய்
நீரோடு அட்டிக் கொடுத்தமையால் நீடு புக்தி துய்த்தபின்
அளவரிய ஆதிராஜரை அகல நீக்கி அகலிடத்தைக்
களப்ரன் என்னும் கலி அரைசன் கைக் கொண்டு ... ... ...
... ... ... ... ... ... ... ... ... ...
ஒல்காத வேல்தானையொடு ஓதவேலி உடன் காத்த
பல்யாக முதுகுடுமிப் பெருவருதி என்னும் பரமேஸ்வரனூர்
வேள்விகுடி என்னப்பட்டது கேள்வியில் தரப்பட்டதனைத்
துளக்கம் இல்லாக் கடற்குனையாய் !
களப்ரரால் இறக்கப் பட்டது'.

வேள்விக்குடிச் செப்பேடுகள்: [செந்தமிழ் தொகுதி, 60; பகுதி 7, 8, 9; 1964 – ஐப்பசி – மார்கழி. பக்: 121.]

செப்பேட்டால் நாம் அறிய வேண்டியன:

1 'சுருதி மார்க்கம் பிறழாத' என்பதாலும், வேள்வி முற்று

விக்க என்பதால் வேள்விக்குரியர் பார்ப்பார் என்பதாலும், அந்தணாளர் முன்பு' என வருவதாலும், வேள்விக்குடி என்னும் ஊரைக் கொடையாய்ப் பெற்ற கொற்கை கிழான் நற்கொற்றன் ஒரு பார்ப்பான் என்பது தெளிவு.

2. கொடுக்கப்பட்ட கொடை வேள்வி முழுமை அடைவதற்காக ஆகும்.

3. பாகனூர் என்னும் ஊர் 'வேள்விக்குடி'எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

4. கொடுக்கப்பட்ட ஊர், மலர்ச்சோலைகளும், நீர்வளமும், வயல் வளமும் மிக உடைய ஊராகும்

5. வேள்வி, முற்று விக்க வேண்டி, வேள்வி யாலேயே பெயர் பெற்ற முதுகுடுமியால், பார்ப்பனர்க்குக் கொடுக்கப்பட்ட ஊரைக் களப்பிரர் கைப்பற்றிக் கொண்டனர்.

நாம் மிக ஆராய வேண்டியது களப்பிரர் கைப்பற்றியது ஏன் என்பது தான்.

1. கைப்பற்றிக் கொண்ட களப்பிரருக்குப் பாண்டியனின் செயல் பிடிக்காதிருந்திருக்கவேண்டும்.

2. பார்ப்பன எதிர்ப்பாளராய் இருந்திருத்தல் வேண்டும்.

3. கொடுக்கப்பட்ட கொடைக்குரிய காரணம் வேள்வியாகும். ஏனைய அறக் கொடைகளைத் தவிர்க்காத களப்பிரர் வேள்விக் கொடையை மட்டும் பறிப்பானேன்? வேள்வி மீதுள்ள வெறுப்பே, எதிர்ப்பே காரணமாய் இருக்க வேண்டும். களப்பிரர்க்கு வேள்வி உடன்பாடு என்றால், அவர்கள் அவ்வூரை ஏன் கைப்பற்றப் போகிறார்கள்? ஆதலின் களப்பிரர்க்கு வேள்வி உடன்பாடு அன்று என்பது தெளிவு.

iv ஆரியரின் செல்வாக்கை எதிர்த்து நடந்த முதற் புரட்சி:

வேள்விமுறை தமிழர் அறமன்று என்பதாலும், பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற நாட்டில் பார்ப்பனர்க்கு எனத் தனிச்சலுகை

கூடாது என்பதாலும், ஆரியரின் கைப்பாவைகளாகத் தமிழ் மன்னர் இருப்பது தவறு என்பதாலும் களப்பிரர் வேள்விக்குடியைக் கைக்கொண்டு இருக்கவேண்டும். தமிழர், தம் நெறி மறந்து, வேதநெறி, ஆரியக்குல நெறியில் சென்று கொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்த, அத்துடன் தூய தமிழ் மொழியை, தமிழ்க்கலையை, தமிழ்ப்பண்பாட்டை, வடபுல ஆரியரின் படைஎடுப்பினின்று காக்க, ஒரு கூட்டம் விரும்பிற்று. இசுலாமியச் சமயத்தின் காலடியில் தமிழகம் கி. பி. 16ஆம் நூற்றுண்டில் நசுக்குண்டு கிடக்கும்போது எப்படி, கிருட்டின தேவராயர்க்கு இந்து சமயத்தையும், மக்களையும் காக்கவேண்டும் என்று மனம் விரும்பிற்றே, அதே போன்றே தமிழர் நலங் கருதிய ஒரு கூட்டம், – தமிழர் கூட்டம் தமிழ்நாட்டை ஆரியர் கையினின்று, ஆரியர் வழிப்பட்ட தமிழ் வேந்தர் கையினின்று மீட்க விரும்பிற்று – அக் கூட்டந்தான் களப்பிரர் என்ற இனம். **தமிழ் நாட்டில் தமிழர்தம் கொள்கை காக்க, ஆரியரது செல்வாக்கை எதிர்த்து நடந்த முதற் புரட்சி ஆகும் இது; இஃது ஒரு பண்பாட்டுக் காப்புப் புரட்சி!** வரலாற்றுசிரியர் சிலர் குறிப்பது போன்று ஏதிலரின் படையெடுப்பு[1] அன்று, தமிழ்நாடு தவிர்த்த ஏனைய எந்த நாட்டு அரசர் வரிசையிலும் ‘களப்பிரர்’ என்ற அரச இனம் குறிக்கப்படவும் இல்லை. பேரா. கே. ஏ. என். சாத்திரி, களப்பிரர் பற்றி வேறு கருத்தினராயினும், அவர் இவ்வரசியல் மாற்றத்தை “... ... ... the political revolution which the kalabhras effected was provoked by religious antagonism”[2] என்று குறிப்பிடுவது ஈண்டுக் கருதத்தக்கது. அதனை ‘மத எதிர்ப்பு’ (Religious antagonism) என்பதை விடப் ‘பண்பாட்டு எதிர்ப்பு’ (Cultural antagonism) என்பதே பொருத்தம்.

கி. பி. மூன்றும் நூற்றுண்டின் தொடக்கத்தில், தமிழகத்தில் ஆரியச் செல்வாக்கை எதிர்த்து நடத்திய இக் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கியவர் களப்பிரர் என்ற இனத்தார் ஆவர். அவர் தமிழ் நாட்டில்

---

1. பாண்டியர் வரலாறு. பண்டாரத்தார். பக். 32.

2. Histoay of South India. K. A. S. Sastri. P. 139.

Development of Religion in South India. P. 36.

வாழ்ந்த தமிழரே.[1] அசோகன் கல்வெட்டில் குறிக்கப்படும் கலபூரியரே களப்பிரர் என்பதோ,[2] களப்ரர் தமிழ் தெரியாக் கன்னட நாட்டினர் என்பதோ,[3] அவர் தென்னிந்தியக் குடியினரே அல்லர் என்பதோ,[4] சரியான கருத்து அன்று.

## V இருண்டகாலம் அன்று:

"தமிழ்க்கலை, தமிழர் நாகரிகம், பிற சிறந்த பண்புகள், ஆகிய எல்லாம் சிதைந்தழிந்து போயின. மதுரைமா நகரில் தமிழாராய்ச்சி செய்து கொண்டிருந்த கடைக் கழகமும் அழிந்தது. களப்பிரர் ஆட்சியால் ஏற்பட்ட தீமைகளுள் இதனினுங் கொடியது வேறில்லை என்று கூறலாம். எனவே இவர்களது ஆட்சிக் காலம் ஓர் இருண்டகாலமாகும்"[5] என்று அறிஞர் பண்டாரத்தார் குறிப்பிடுகின்றார். இக் கருத்தின் முதற் பகுதி சரியன்று என்பது மேலே கூறிய வரலாற்றுண்மையால் தெளிவாயிற்று. அதன் பிற்பகுதியும் சரியன்று என்பது இனி விளக்கப்பெறும்.

கி. பி. 3-ஆம் நூற்றாண்டு தொடங்கி 6-ஆம் நூற்றாண்டிற்குள் தமிழில் வடமொழிச் செல்வாக்கும், தமிழ் நாட்டில் பிற சமயங்களின் செல்வாக்கும் மிகுந்தது உண்மைதான். ஆனால் இந்த இரண்டின் செல்வாக்கிற்கும் கலப்பிற்கும் காரணம், களப்பிரர் அல்லர். களப்பிரர் வடமொழியை வளர்த்தார்கள் என்பதற்குத் தெளிவான சான்று எதுவும் இல்லை. மாறாகத் தமிழர் அல்லாத பல்லவர் வடமொழியைப் பேணி வளர்த்தார்கள் என்பதற்கு நிறைந்த சானறுகள் உள்ளன.

---

1. Introduction of Pallavas of Kanci-Prof. S. Krishnaswami (Ayyangar) P. XIX – XXV.

   History of the Pallavas of Kanci–R. Gopalan. P. 85.

   நாமிருக்கும் நாடு. பர். மு. ஆரோக்கியசாமி. பக். 94, 95.

2. மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்–மறைமலை அடிகள். பக். 269

3. Journal of Indian History. XXXIV. K.R. Venkatraman. P. 185.

4, 5.–பாண்டியர் வரலாறு. பண்டாரத்தார். பக். 36, 32.

இதனை அவர்கால வடமொழிக் கல்வெட்டுகளும், அவர்களால் நடத்தப்பட்ட வடமொழிக் கல்லூரிகளும், அவர்களால் போற்றப்பட்ட பாரவி முதலிய வடமொழிப் புலவர்களின் வரலாறுகளும், தெள்ளத் தெளிவாக்குகின்றன. தமக்கு எதிர்ப்புக் காட்டும் தமிழராய களப்பிரரை, பல்லவர், சிவகந்தவர்மன் (கி. பி. 300–325) காலத்திலும் புத்தவர்மன் (கி. பி. 5-ஆம் நூற்றாண்டு) காலத்திலும், சிம்மவிட்ணு (கி. பி. 575–615) காலத்திலும் முதலாம் நரசிம்மன் (630–660) காலத்திலும் போரிட்டு ஒடுக்கி உள்ளனர் என்பதுவும் மேற்கண்ட கருத்தை வலிவுபடுத்தும்.

அந்த முந்நூறு ஆண்டுகளில் தமிழ் பெற்ற இலக்கியச் செழுமையைக் கீழ்வருஞ் செய்திகள் காட்டும். இவற்றுள் பெரும்பாலன, தொண்டை மண்டலம் அல்லாத பிற இடங்களில் வளமை பெற்றன என்பது கருதவேண்டிய ஒன்றாகும்.

1. கி. பி. 470-இல் மதுரையில் வச்சிரநந்தி என்பாரால் ஒரு "திரமிள சங்கம்" வைத்து நடத்தப்பட்டது என்பது 'திகம்பர தரிசன சாரம்' என்ற நூலால் அறியப்படுகிறது. 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன் காண்' என்று அப்பர் குறிப்பதால் அவர்காலத்திற்கு முன் ஒரு 'சங்கம்' இருந்தது. அச் 'சங்கத்'தின் வழி பல தமிழ் நூற்கள் வெளி வந்தன.[1] இக் கழகம், முந்தைய முக்கழகங்களினின்று வேறுபட்டது.

2. கழகக்காலத்துப் பாடப் பெற்றுச் சிதறிக் கிடந்த அரிய தனிப்பாடல்களை எட்டுத் தொகை, பத்துப்பாட்டு எனத் தொடுத்த காலம் இக்காலந்தான்.

3. பேரா. கே. ஏ. என். சாத்திரியார் கருத்துப்படி பதினெண் கீழ்க்கணக்கில் பெரும்பாலன இக்காலத்தேதான் எழுந்தன.[2]

4. பேரா. சாத்திரியார் கருத்துப்படி சிறந்த பாவியங்களாகிய சிலப்பதிகாரம், மணிமேகலை இக்காலத்தனவே.[3]

---

1. இலக்கியத்தோற்றம். மு. கோவிந்தசாமி. பக். 17.

2, 3. – A History of South India. P. 140.

5. காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் ஆகியவையும்,[1]

பின்னுள்ளவையும் இக்காலத்தனவே!

6. திருமூலரின் திருமந்திரம்.

7. முத்தொள்ளாயிரம்.

8. பெருங்கதை.

9. கிளிவிருத்தம், எலிவிருத்தம், நரிவிருத்தம்.

10. இறையனுர் அகப் பொருள் உரை.

11. பரிபாடல், கலித்தொகை, திருமுருகாற்றுப்படை.[2]

12. கல்லாடம்.

13 கபிலதேவர், பரணதேவர் பாடியன.

14. பாரதம் பாடிய பெருந்தேவனுர்.

மேற்கண்ட இலக்கிய எழுச்சிகளைப் பார்க்க கி. பி. 3 முதல் 6ஆம் நூற்றுண்டுவரை உள்ள காலத்தை இலக்கிய இருண்டகாலம் என்பது பொருந்துமா? இலக்கிய எழுச்சியும், அற இலக்கியப் பெருக்கமும், இலக்கியத் தொகுப்பும்- நிறைந்த காலமாக அக்காலம் திகழ்கிறது. இது பற்றி திரு. மு. கோவிந்தசாமி கூறுவது கவனிக்கத்தக்கது.

‘தமிழ் இலக்கிய வரலாற்றில் இஃதொரு பொற்காலமாகும். இந்திய வரலாற்றில் கி. பி. 300–600 க்கு உட்பட்ட காலத்தை – குப்தர் காலத்தைப் பொற்காலம் எனக் குறிக்கின்றனர். தமிழகத்தில் இக்காலம் ஓர் இருண்ட காலம் எனக் கருதப்படுகிறது. சேர சோழ பாண்டியரின் வரலாறு எதுவும் இக்காலத்தில் தெளிவாகக் கிடைக்கவில்லை என்பதே அதற்குக் காரணம். ஆனுல் இலக்கிய வளர்ச்சியில்

1. தமிழ் இலக்கிய வரலாறு. பண்டாரத்தார். பக். 74.

2. இலக்கியத் தோற்றம். பக். 14, 79.

ஒளி நிறைந்த காலம் இதுவெனத் தோன்றுகிறது.' [1] கி. பி. ஆறும் நூற்றுண்டுக்குப்பின், பாண்டித்துரைத் தேவர் அமைத்த கழகத்திற்கு முன் பல்லவரும், பாண்டியரும், சோழரும் தமிழ்நாட்டை ஆண்டனர். சோழர் காலத்தில்– தமிழகத்தின் சிறப்பு உலகெங்கும் கொடிகட்டிப் பறந்தது. அவர்கள் காலத்தெல்லாம் செய்யாத மொழித் தொண்டு, களப்பிரர் காலத்தில் நடந்திருக்கிறது என்பதைத் 'திரமிள சங்கம்' இடித்துரைக்கிறது.

vi இருட்டடிப்புக் காலம்:

அந்த முந்நூறு ஆண்டுகளில் ஆண்ட மன்னர்கள் யார்? யார்? என்பது தெரியவில்லை. அந்த அரிய பண்பாட்டுப் போரின் வரலாற்றுத் தலைவர்கள் அறியப்படாமல் போனமைக்குக் காரணம், பிற்காலத்து வடமொழிப் பற்றும், வடபுலச் சமயக் கொள்கைகளும் கொண்ட பல்லவரின் பேரெழுச்சியே காரணமாகக் கூடும். புதிதாக ஆட்சிக்கு வந்தோர், தமக்கு முன்பு ஆண்ட பகைமன்னர்களின் எச்சங்(சின்னங்)களையும், சான்றுகளையும் அழித்தல் வரலாற்றேடுகளில் அடிக்கடி காணுகின்ற நிகழ்ச்சியாகும். இசுலாமியர் இந்துக் கோயில்களை இடித்துத் தரைமட்டமாக்கிய வரலாறும், சைவ வேந்தர் சமணப் பள்ளிகளை அழித்த வரலாறும், இன்றுங்கூட ஆங்கிலப் பேரரசின் எச்சங்(சின்னங்)கள் அகற்றப்படுவதும்– கருதத்தக்கன.

இவற்றை மனத்துட்கொண்டு பார்க்கும்பொழுது, கி பி. 3 முதல் 6 நூற்றுண்டுகட்கு உள்ளிட்ட களப்பிரர் தொடர்பான வரலாற்றுச் சான்றுகளை, பிற்காலத்து வேத சமயத்தார் அழித்து விட்டனர் என்று உய்த்துணர இடமுண்டு.

கி. பி. 3-ஆம் நூற்றுண்டில் நடந்து முடிந்த இப்பெரும் புரட்சி ஓர் உள்நாட்டு போரே; வெளிநாட்டுப் படையெடுப்பன்று, ஒரு நாட்டுக்குள்ளேயே இரு கொள்கைகள் எதிர்த்துக் கொள்வதும், ஒன்று வாழ்வு பெறுவதும், மற்றொன்று அடக்கப் பெறுவதும், அடக்கப்பட்டது கிளர்ந்து மீண்டும் வாழ்வு பெறுவதும் – உலக நாடுகளில் ஆங்காங்கு இன்றும் நிகழ்ந்து வருகின்றன. இது போன்ற ஒரு வரலாற்று

[1] இலக்கியத் தோற்றம். பக். 15.

நிகழ்ச்சிதான் களப்பிரரின் எழுச்சியும், வீழ்ச்சியும்! வேத மனப் பான்மையுடைய மன்னரை எதிர்த்துக், களப்பிரர் போர்க்கொடி உயர்த்தினர்; கி. பி. ஆறும் நூற்றாண்டில் மீண்டும் வேதச்சார்பினர் ஆட்சி பெற்று, எதிர்ப்பினர் தாழ்ச்சி பெற்றனர்; அத்துடன் வேதச் சமயத்தின் கொடும் பிடியில் அகப்பட்டு, அது, மெல்லச் சிறுத்து மடிந்து விட்டது என்றுதான் கூறவேண்டும். O

[களப்பிரரின் பெயர்க்காரணம், களப்பிரர் புரட்சி தொடங்கிய முதல் இடம், களப்பிரரின் தேய் பிறைக் காலம் ஆகியன தனிக் கட்டுரைகளில் ஆராயப் பெறும்.]

(33ஆம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக நுட்பமாகப் பணிசெய்யும் நுண்ணறிவினோரைக் காண்கிலேன். வாழாமல், வாழ்வதாகக் கற்பனை செய்து கொண்டிருக்கும் மாயப் பிறப்பறுக்கும் மன்னன் வரும் நாள் எந்நாளோ? தமிழாக்கம் தன்னாக்கம் இரண்டும் ஒன்றே என்று எண்ணுதார், நண்ணுதாரினும் நனிபகைவர் என்பதை யாரே அறியார்?

நாட்டுப் பற்று, பொதுத்தொண்டு, கட்சிப்பணி, அரசியல் எதிலும் தற்குறித்தனமும், களவாடு நோக்கமும், பகைமையும், வெறியூட்டு போக்கும், தன் பேற்றுக் குறிக்கோளும் மிகுந்துள்ளன அத்துறையில் நடமாடுவோர் ‘பரத்தை’மனத்தினராய்த் திரிந்து மன்பதையைப் பாழாக்குகின்றனர். இளைஞர்கள் இவர்களோடு தொடர்பு கொள்ளவும், இவர்களுக்கு வாழ்வில் கிட்டும் செல்வம்—சிறப்புகளை உணரவும் வாய்ப்பேற்படும்போது, தாமும் அவர்கள் சென்ற வழியிலேயே நடந்து, அதே பேறுகளை அடைய விரும்புகின்றனர். இந்த ஆவலைக் குறை கூறுவது எளிது ஆயின், குறை கூறுவதால் மட்டுமே மக்களோ, மனங்களோ திருந்திவிட இயலுமா? குறையை உணர்வதும், திருந்துவதும், திருத்துவதும் அரிய பெரிய செயல்களாகும். திருந்தாதவர்களும், திருந்த விரும்பாதவர்களும் மிகப் பலராக இருப்பதால், மன்பதை கெட்டழிகிறது. சூழ்நிலையென்று காரணியம் சொல்லி வாழ்நிலை கெட்டவர் பல்லாயிரவராவர். மனநிலை நன்னிலையில் அமைய வாழ்பவரே உண்மைத் தொண்டராவர். இதனை உணர்வதே ஒரு நல்லறமாகும். O



# மக்களவை

## முதற்பகை ஆரியப் பகையே !

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம். தாங்கள் கடந்த சில மாதங்களாகத் தென்மொழியில் எழுதிவரும் ஆசிரியவுரையைச் சிலர் குறை கூறத் தொடங்கிவிட்டனர். அவ்வாறு குறை கூறுவார் பலரில் தமிழ்மொழி வளர்ச்சியில் அக்கறையற்ற தான்தோன்றிகளுமே, அரசியல் அறிவற்ற தற்குறிகளும், அறிவு மழுங்கிய (கட்சிப்போர்வையில் முடங்கிக் கிடக்கும்) பேதையரும் என்பதை நினைக்கும் போது கழிவிரக்கங் கொள்ளாமலிருக்க முடியவில்லை. அந்தோ! தமிழின் தீவினைக் காலமோ இஃதென எண்ணத் தோன்றுகிறது.

இற்றைய நிலையில் உள்ள வறுமை நிலையையும், ஆட்சி, மொழி போன்ற இன்னோரன்ன துறைகளிலுள்ள சிக்கல்களையெல்லாம் அறிவோம். இச் சிக்கல்களை ஆட்சியில் இருப்போர் மட்டும் முனைந்தால் களைந்துவிட முடியுமென்று எண்ணுவதினும் மடமைநிறைந்த செயல் ஒன்றுண்டோ? பொதுமக்களின் தான்தோன்றித் தனமும் ஆட்சியாளரின் பதவி வெறியும், மொழி, சமயம், குலம் போன்ற பல்துறைகளிலுமுள்ள வெறியர்களாலும் மலிந்து வரும் குறைபாடுகளைக் கொண்டு ஆட்சியைக் கவிழ்த்து மாற்றரசு அமைக்க வேண்டுமென முனைகின்ற எதிர்க்கட்சியினரிடத்து, பேராயக் கட்சியினரிடமுள்ளவையினும் இழிந்த செயல்கள் பல இருக்கின்றமையால், நடுநிலையோடு அரசியலை ஆய்ந்து இன்றைய நிலைக்கு ஒட்டியும் எதிர்க்கட்சியினருக்கு மாறாகவும் ஒருசிலவற்றை எழுத நேர்ந்தது. இதனை உற்று நோக்காது கட்சிப் போர்வையில் நின்று உணர்ந்து குறை கூறத்தொடங்கிய வல்லடிமைகளின் புல்லுரைகள் எம்மனோர் உள்ளத்தில் அணுவளவு மாற்றத்தையும் விளைவித்துவிடா என்பதை ஈண்டு உணர்த்துவம்.

ஆட்சி மாற்றம் இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்திற்கு இற்றைய நிலையில் தேவையே. இதைத் தமிழ்மேல் அக்கறை கொண்ட யாரும் மறுத்தற்கில்லை. ஆயினும் ஆட்சி மாற்றம் ஒன்றையே மக்களின் முன்னிறுத்திப் பன்னெடுங் காலமாகத் தமிழுக்குப் பகையாயிருந்து வரும் பார்ப்பனக் கும்பலிடத்துக் கூட்டுப் போவதினும் தீவினைச் செயல் வேறொன்றுமில்லையென உணர்வம். இவ்வாறு உழைப்பதனால் பரந்தநோக்கம் இல்லையெனக் கூற முயல்வாருமுண்டு. பரந்த நோக்கம் குறுகிய நோக்கம் என்ற சொற்களுக்கெல்லாம் மெய்ப்பொருள் தென்மொழியின் அகர முதலியிலுண்டு. உலகில் பரந்த நோக்கங் கொண்ட அரசியல் தலைவர் அனைவரும் இன உணர்வெனும் போர்வையையே அணிந்திருந்தனர் என்பதை அறியாரே இவ்வாறு உளற நேரும் பண்பாடு மொழி, அரசியல் எல்லாவற்றிலும் தனக்கு நிகரில்லையென விளங்கிய தமிழினம், விளங்க வாய்ப்புள்ள தமிழினம் போலிமையும் புன்மையும், திரிபுணர்வும் கொண்ட உலகிலேயே மிக மிகக் கொடிய ஓரினமாகிய ஆரிய இனத்தவரோடு கூட்டுப் போவதினும் – அவர்களின் வல்லடிமையாக வாழ்வதினும் குறுகிய நோக்கம் ஒன்றுண்டோ?

தமிழருக்கு வடவர்பால் வரும் பகையினும் பார்ப்பனர்பால் வந்த பகையே–வருகின்ற பகையே – வரப்போகின்ற பகையே கொடியதும் பன்னெடுங்காலமாகத் தமிழகத்துள் ஊன்றி உரம் சான்றதுமென்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. பார்ப்பனரின் பகையால் வரும் தீவினைச் செயல்கள் சில ஆண்டுகளாக ஒடுக்கப்பட்டு வருகின்ற இந்நேரத்தில் ஆட்சிமாற்றம் ஒன்றையே முன்னிறுத்தி மீண்டும் வலிமையுறச் செய்வதினும் மடமைச்செயல் வேறில்லையென எச்சரிக்கின்றோம். தமிழிற்கு வரும் பகை இருமுனையிலிருந்தும் வருகின்றதென்பது வெள்ளிடைமலை. ஆகவே முதற் பகையாகிய பார்ப்பனரை ஒடுக்கிவிட்டால் பிற பகையை எளிதில் வென்று விடலாம். இதையெல்லாம் உணராதார் உரைக்கின்ற புன் மொழிகளால் தென்மொழியின் உரம் சான்ற கொள்கைகள் தளர்ந்துவிடா வென்பதை நினைவிற்குக் கொணர்கின்றோம்.

நெடுமறம். அன்புள்ள,

சிலை, கக. மு. தூரை. இளந்திரையன்.

# சிறுர்களிடம் இப்படியா?

விலங்கினங்களுக்கு நுண்ணறிவு கிடையாதென்பது நாம் அறிந்ததே. ஆனல் இந்த விலங்கினங்களோடு மாந்தனையும் சேர்த்துச் சொன்னல் அதை என்னவென்று சொல்வது?

தவளை, எட்டுக்கால் பூச்சி, எருது ஆகியவற்ருேடு மாந்தரைச் சேர்க்க முடியுமா?

'நள்ளிரவு நேரம். குளத்தில் நிலா தெரிகிறது. குளத்தில் நிலா தெரிவதைக் கண்ட தவளை, நிலவை எடுத்து வானத்தில் ஒட்டவைக்க முயலுகிறது. இதற்காகத் தவளை எட்டுக்கால் பூச்சியை அழைக்கிறது; எட்டுக்கால் பூச்சி எருதை அழைக்கிறது; எருதோ, குடியானவரை அழைக்கிறது. குடியானவரோ கயிற்றை எடுத்துக் கொண்டு வந்து, குளத்தில் போட்டுக் கட்டி இழுக்கிருர். அவராலும் முடியவில்லை. பின்னர் அவர் ஒரு முனிவரைத் தேடிச் செல்கிருர். முனிவர் வந்து, குளத்தருகில் தவஞ்செய்து உண்மையைக் கண்டு பிடிக்கிருர். அப்போது தான் "நிலவு குளத்தில் விழவில்லை; அதன் நிழல்தான் குளத்தில் தெரிகிறது. நிலவு எப்போதும் போல் வானத்தில்தான் நிற்கிறது" என்ற உண்மையை உணர்கிருர்.

–இப்படியொரு பாடம். ஆங்கிலத்தில்! ஐந்தாம் வகுப்புக்கு!
ஒரு பாடம் மட்டுமன்று; இரண்டு!

தொடக்கத்திலேயே எல்லாம் முரண்பாடு. நிலவு வானத்தில் தான் இருக்கும். அதுவோ குளத்தில் விழுந்து விட்டது என்று எண்ணும் தவளைக்கு, குளத்தில் தெரிவது நிழல்தான் என்பது தெரியாமலா போய்விட்டது.

அடுத்தப்படியாகத் தவளை, பூச்சி, எருது ஆகியவை பேசுகின்றன. போகட்டும் இவற்றிற்குத்தான் அறிவில்லை; உண்மை தெரியவில்லை. குடியானவனுக்குமா அறிவில்லாமல் போய்விட்டது?

இது கிறித்துவுக்கு முந்தைய கதையாயிருந்தாலும் இக் கருத்து கொள்ளத்தகுமா? கதைக்குக்கூட இவ்வுண்மை பொருந்தாதே. ஆனல் இதையே–கதையாக்கிப் பாடமாக்கி, நம் சிறுவர்களிடையே உலவ விட்டிருக்கிருர்களே என்னே அவர்கள் புலமைத் திறம்!

'அந்தக் கதையில் இதையெல்லாம் ஆராயக்கூடாது. வெறும் மொழிப் பயிற்சியைத்தான் எண்ண வேண்டும்' என்று ஒருவர் சொன்ஞர். மொழிப் பயிற்சியின்போதும் இந்த உண்மை சிறுவர்களுக்கு விளங்கத்தானே செய்யும்?

இந்த ஆண்டு, மூன்ரும் வகுப்பிலிருந்தே அறிவியல் நுழைக்கப் பட்டிருக்கிறது. வளர்ந்து வரும் நூற்ருண்டில், அறிவியல் புதுமைகள் வான மண்டலம் வரை எட்டிப் போகின்றன. இந்த நேரத்தில் மாந்தர்களுக்குள்ளேயே, ஒருவனுக்கு அறிவு இல்லே, ஒருவனுக்கு அறிவு இருக்கிறது என்ற பாடம் தேவையா?– இப்படிச் செய்யலாமா?

இதனுல் விளேயப்போகும் நன்மை என்ன?

நஞ்சைப் பரப்பிவிட அவர்கள் (!) எப்படிப்பட்ட பிஞ்சு உள்ளங்களே தேர்ந்தெடுத்து இருக்கிருர்கள்; பாருங்கள்!

நன்ருக எண்ணிப் பாருங்கள்!

தங்கள் அன்புள்ள,
'ஓர் ஆசிரியர்'
திருப்பாலேத்துறை, பாவநாசம்.

## "மன்றங்களின் திருப்பணி"

அன்புடையீர்,

இதுபோது தமிழகத்தில் திரும்பிய பக்கமெல்லாம் திரைக்கலேஞர்களின் மன்றங்கள் நிறைந்து காணப்படுகின்றன.

கலே போற்றற்குரியதே! ஆனுல், கலே என்ற பெயரால் களேயினே வளர்த்து வரும் எதுவும் தடுக்கப்படவேண்டும். அவற்றுள் இம் மன்றங்களும் ஒன்ருகும்.

இம் மன்றங்கள் பொழுது போகாத ஒரு சிலரின் 'கழகப் பலகை' களாக விளங்குகின்றன. எள்ளத்துணேயும் பயனற்ற தாளிகைகளுக்காக இவை நிறையச் செலவிடுகின்றன.

இம்மன்றத்தில் பேச்சுக்கு வராத பொருளே இல்லே யெனலாம். 'வெறும் பேச்சுக்கோ வந்ததிந்த மன்றங்கள்' என மற்றையோர் சலித்துக் கொள்ளுமளவிற்கு இவை பொறுப்பற்றனவாய்க் கேடு மிகப்

# தமிழ்த்தாயின் இழிமக்கள்

புலவர்–இறைக்குருவன்.

முன்னாள் நந்தம் முத்தமிழ் மொழியைப்
புன்மை நெஞ்சினன் போலிப் புலவன்
“[1]அன்றியும் ஐந்தெழுத் தாலொரு பாடையென்
றறையவும் நாணுவர் அறிவுடை யோரே !
யானும் [2]அதுவே (!) அறிக” வென்றே
கழறினன் என்று பதறினம். இன்றோ
தானே கடவுளாத் தருக்கித் திரிவோன்
கூனல் அறிவினால் கோட்டி கொள்ளுவோன்
நமதருந் தமிழைப் பேசத் தெரிந்தும்
சமற்கிரு தத்தால் சாற்றினேன் றன்னைக்
கண்டள வளாவச் சென்றநம் அன்னைத்
தண்டமிழ்ப் புலவர் “தம்மொடு தமிழில்
மொழிசெயா தடிகள் வடமொழி விண்டு

---

1. இலக்கணக் கொத்து பாயிரம்.
2. அஃறிணை போலும் !

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

பெருக்கிக் கொண்டு வருகின்றன. பல மன்றங்கள் கட்சிக் கண்ணோட்டத்தோடு இயங்கி வருகின்றன. ஆகவே, இவற்றுள் போட்டியும், பூசலும் பெருகி விரும்பத்தகா விளைவுகட்கு வித்திடுகின்றன.

அறிவையும், பண்பையும் வளர்க்க வேண்டிய மன்றங்கள், இழிவையும், அழிவையும் ஈந்து கொண்டிருக்கின்றன.

இவை போன்ற மன்றங்கள், செவ்விய முறையில் இயங்கிவரும் மன்றங்கட்கும் தீய பெயரைப் பெற்றுத் தந்து விடுகின்றன.

ஆகவே, இத்தகு களைகளை நீக்கத் தமிழர்கள் முனைவார்களாக.

கோவை–16.
3–11–66

அன்புள்ள,
குறிஞ்சிவேந்தன்.

மொழிபெயர்த் துரைக்க மொழியுமா றென்''னெனத்
''[3]தேவ பாடையில் தெரிக்குத லன்றிப்
பூசா வேளையில் சுவாமிகள் வாயால்
நீச பாடையில் நிகழ்த்தலர் உரை''யென
முடைநா றிழிவாய்க் கிடைநா புரட்டிப்
புடைநின் றொருவன் விடை செய் தனனல் !
இவ்வுரை கேட்டு வெவ்வழற் பட்ட
புழுப்போல் உள்ளப் புலந்துடித் தெம்மனோர்
மறத்தமிழ் மக்கள் மடிந்திரார் இனியும் ;
புறத்தெழுந் தார்த்துப் புலிவேல் தாங்கித்
தாய்த்தமிழ் பழித்த இழிசின் மகனை
மாய்த்திடு வாரென மனங்கொண் டிருந்தனம்.
பேரா சிரியர், பெருந்தமிழ்க் காவலர்,
மேடை முழங்கிகள், பீடறு தமிழர்
கோடை இடிபோல் கூக்குர லிட்டே
அவர்வழிச் செல்லும் அளவில் தொகையினர்,
ஆட்சி மேடையின் அடங்காப் பிடரிகள்,
அனைவரும் வாயொடு முக்கும் அடைத்தனர் !
புனைவின னுடையவும் அவனன் னோரவும்
காலுந் தலைமேற் கொண்டு
மேலுங் கழுவிக் குடித்(து)உவந் தனரே !

---

3. தென்மொழி சுவடி: ௨. ஓலை: ௬, பக்கம்: ௧அ.

---

## பிழை திருத்தம்.

தென்மொழி நளி (சுவடி: 4; ஓலை: 10) இதழில் வெளியான 'ஆக்கப்பணிக்கு அணு ஆற்றல்' என்னும் கட்டுரை (பக்கம்: 32. இறுதி வரி) யில் உள்ள சமன்பாட்டைக் கீழுள்ளவாறு திருத்திக் கொள்க !

ஆற்றல் = எடை × (ஒளிவேகம்)$^2$

— அமைச்சர்.

# அழற்சி (INFLAMMATION)

பொ. குமாரசாமி, சா. க. பழனிசாமி.

## தொடக்கம்:-

அழற்சி, நோயியலின் மிகவும் முகாமையான ஒரு பகுதியாகும் இதன் வரலாறே நோயியலின் வரலாறெனின் மிகையாகாது. நோயால் உடம்பில் ஏற்படும் பல மாற்றங்களில் மிகப் பொதுவானதும் முகாமை யானதும் அழற்சியே.

## அழற்சியென்ருல் என்ன ? :-

தனக்கேற்படும் ஊறுகளால் உயிருள்ள திசுக்கள் மேற்கொள்ளும் மறுவினையே அழற்சி எனப்படும். இஃது ஒரு தற்காப்பு வினையேயாகும். பொதுவாக எல்லா நோய்களிலும் திசுச்சிதைவு குறைந்த அளவிலோ, மிகுந்த அளவிலோ ஏற்படுமாதலால், அழற்சி குறைந்த அல்லது மிகுந்த அளவில் எல்லா நோய்களிலும் ஏற்படும். அழற்சியுண்டான இடத்தில் வலி, வெப்பம், வீக்கம், செந்நிறம், வினையியலாமை ஆகிய ஏற்படுகின்றன. இவையே அழற்சியின் அறிகுறிகளாகும். அழற்சி இரு பகுதிகளைக் கொண்டது. முதலாவது – அழற்சியுண்டாக்கும் பொருட்களை யழிப்பதும், நீக்குவதுமாகும். இரண்டாவது– சிதைந்த பகுதிகளைப் பழுது பார்த்தலுமாகும்.

## கரணியங்கள் :-

அழற்சிக்குக் கரணியம் அழற்சி கொடுக்கும் பொருட்களே. இவற்றை உயிருள்ளவை, உயிரற்றவை என இருவகைப் படுத்தலாம். உயிருள்ளவற்றில் நோய் கொடுக்கும் நுண்ணுயிரிகள் (Bacteria) முதன்மையானவை. விலங்கின ஒட்டுண்ணிகளும் ஒரோவழி அழற்சி கொடுப்பனவாகும். ஈண்டு இவற்றின் வேதிய நஞ்சுகளும், சிற்சில விடத்து அவற்றின் அசைவுகள் போன்ற செயல்களும் கரணியமா கின்றன. உயிரற்றவற்றில் புளியம், காரம், நச்சுப் பொருட்கள் போன்ற வேதியங்களும், மிகுந்த வெப்பம், குளிர்ச்சி, அழுத்தம், மின் விசை, ஒளி, இராஞ்சன் கதிர்கள் போன்ற பொருளியங்களும் முகாமை யானவையாகும். அழற்சி கொடுப்பன வலுக் குறைந்த நிலையில்

தூண்டிகளாக இயங்குகின்றன. ஆதலால் அழற்சி ஏற்பட்ட இடத்தின் நடுவில் திசுச்சிதைவும், அதைச் சுற்றியுள்ள இடங்களில் திசு வளர்ச்சியும் (தூண்டுதலால்) ஏற்படுகின்றன.

அழற்சியாலுண்டாகும் மாற்றங்கள் :-
(குருதிக் குழல் மாற்றங்கள்)

அழற்சியால் அதைச் சூழ்ந்துள்ள இடங்களிலுள்ள குருதிக் குழல்கள் விரிவடைகின்றன; அத்துடன் கசிவுத்தன்மையும் மிகுதியாகின்றது. இதனால் குருதியின் விரைவு குறைந்து, குருதித் தேக்கம் ஏற்படுகின்றது. குருதிக் குழலின் கசிவுத் தன்மை மிகுவதால், குருதி நீரும் வெள் அணுக்களும் மிகுந்த அளவில் வெளியேறி அழற்சி கொடுக்கும் பொருள்களுள்ள விடத்திற்கு வருகின்றன. குருதி நீரிலுள்ள நார்ப்புரதம் (Fibrinogen) குருதிக் குழலை விட்டு வெளியேறியதும், மெல்லிய நார்களாக மாறுகின்றது. வெள்ளணுக்கள் இந்நார்களைப் பற்றிக் கொண்டே, அழற்சி கொடுப்பவற்றை நோக்கி நகர்கின்றன. இந்நார்களின்றி வெள்ளணுக்களால் நகரமுடியாது. அழற்சியின்போதேற்படும் விரிவடைதல், கசிவுத் தன்மை மிகுதல் ஆகிய குருதி மாற்றங்களுக்குப் பலர் பலவிதக் கரணியங்களைக் கூறுவர். அழற்சி கொடுப்பவற்றால் ஏற்படும் நச்சுப் பொருள்களே கரணியமென்பர் ஒரு சாரார். மற்றொரு சாரார், குருதி நீரில் கசிவுத் தனமை யளிக்கும் பொருள்கள் இயங்கா நிலையில் கலந்துள்ளன; இவை அழற்சி கொடுப்பவற்றாலேற்படும் குருதிக் கட்டி, தட்டையணச் (Platelet Cells) சிதைவு, திசுச் சிதைவுப் பொருள்கள் முதலியவற்றால் இயங்கும் நிலைக்கு மாற்றப்படுகின்றன; இவையே அம்மாற்றங்களுக்குக் கரணியமென்பர். பிறிதொரு சாரார், குருதிக் குழலிலுள்ள சோற்று அணுக்கள் (Mast Cells) சில வேதியப் பொருள்களை வெளியிடுகின்றன. இவையே குருதிக் குழல் மாற்றங்களுக்குக் கரணியமென்பர்.

அழற்சி வடி நீர் (Inflammatory Exudate) :-

மேற்சொன்ன குருதிக் குழல் மாற்றங்களினால் கசிந்து வரும் நீரும், அழற்சி ஏற்பட்ட இடத்தைச் சுற்றியுள்ள திசுக்களிலிருந்து வரும் நீரும், அழற்சியுண்டான இடத்தில் சேர்கின்றன. இவையே அழற்சி வடி நீர் எனப்படும். இதில்தான் குருதியிலிருந்து வந்த வெள்ளணுக்களும், குருதி நீரும் (Plasma), திசுக்களின் அலையும்

அணுக்(Tissue wanderiag cells)களும் கலந்துள்ளன. இம்மூன்றுமே அழற்சி கொடுப்பனவற்றை யழிப்பதிலும், நீக்குவதிலும் பங்கு கொள்ளுகின்றன. வெள்ளணுக்களும் (Leukocytes), திசு அணுக்களும் அழற்சி வடி நீர் அணுக்களெனப்படும்

வடி நீர் அணுக்கள் (Cells of the Exudate) :-

வெள்ளணுக்களில் அதனுட் பிரிவைச் சேர்ந்த நிற மேலாத்தூள் வெள்ளணுக்கள் (Neutro phil levko cyte, செந்தூள் வெள்ளணுக்கள் (Eosinophil Leuko Cyte), நீர்ம அணுக்கள் (Lymphocyte) ஆகியவையும், திசு அணுக்களில் சோற்று அணுக்களும், குருதி, திசு இவையிரண்டிலிருந்தும் தோன்றுவதாகக் கூறப்படும் பெருவிழுங்கி (Macrophage)களும், நீர்ம அணுக்களிலிருந்துண்டாவதாகக் கூறப்படும் குருதி நீர் அணுக்களும் (Plasma cells) அழற்சியில் பெரும் பங்கு கொள்கின்றன.

நிறமேலாத்தூள் வெள்ளணுக்கள் சீழுண்டாக்கும் நுண்ணுயிர்களை யெதிர்ப்பதில் முதனிலையில் நிற்பவையாகும். இவை குருதிக் குழல்களைவிட்டு வெளியேறி, புரத நார்களைப்பற்றிக்கொண்டு அழற்சியுள்ள விடத்தை யடைகின்றன. ஆண்டு அழற்சி கொடுக்கும் நுண்ணுயிர்கள் முதலியவற்றை விழுங்கி யழிக்கின்றன. சில அணுக்கள் நுண்ணுயிரிகளின் நச்சுப் பொருட்களாலழிக்கப்படுகின்றன. இவை அழியும் பொழுது புரதங்கரை நொதி (Proteolyticenzyme) யொன்றை வெளியிடுகின்றன. இந் நொதி அழற்சியாலழிந்த திசுக்களைக் கரைத்து, ஆண்டிருந்தகற்ற உதவுகின்றது. இப்போரில் இறவாத அணுக்கள் நீர்மத்தொடு (Lymph), நீர்மக் குழல் (Lymph vessels) வழியாக மீண்டும் குருதியை யடைகின்றன.

செந்தூள் வெள்ளணுக்கள் ஒவ்வாமை (Allergy) யழற்சியில் பெரும்பங்கு கொள்கின்றன.

சோற்று அணுக்கள் இணை திசுக்களில் (Connective tissue) தோன்றுகின்றன. இவை அத் திசுக்களுக்குச் சோறளிப்பதில் பங்கேற்கின்றன. இவை தங்களுடைய வேதியப் பொருள்களால் அழற்சியில் பங்கு கொள்வதாகக் கூறப்படுகின்றது. எனினும் தற்காப்பில் இதன் பங்கு இன்னும் தெளிவாக்கப்படவில்லை.

நீர்ம அணுக்கள் நாள்பட்ட அழற்சியில் முகாமையான பங்கு பெறுகின்றன. எதிர்ப் பொருட்களை (Anti bodies)ச் சுமந்து செல்வதும் இதன் வேலையாகும்.

குருதிநீர் அணுக்களுக்கும் நாள்பட்ட அழற்சியில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவை பந்துப் புரத எதிர் பொருள்களை (Globulin Antibodies) உண்டாக்குகின்றன. இவ்வெதிர்ப் பொருள்கள் அழற்சிக்குக் கரணியமாய் நச்சுப் பொருள்களுடன் சேர்ந்து, அவற்றை யூறுவிளைக் காதனவாக்குகின்றன. மேலும் இவ்வணுக்கள் ஒவ்வாமை மாற்றங்களுக்கும் கரணியமாகவுள்ளன.

பெருவிழுங்கிகள் பொய்க் கால்களால் தாமாக நகரக் கூடியவை. இவை நுண்ணுயிரிகளைத் தவிர, எல்லாப் பொருட்களையும் விழுங்கி யழிப்பதில் நிற மேலாத்துாள் வெள்ளணுக்களையும் மிஞ்சியவை. ஒரு பொருள், ஒரு பெருவிழுங்கியால் விழுங்க முடியாத அளவுக்குப் பெரிதாக விருந்தால், பல பெருவிழுங்கிகள் ஒன்று சேர்ந்து ஒரு மாபெரும் விழுங்கியை (Giant cell) உண்டாக்குகின்றன. இவ்வணு எளிதாக அப்பொருளை விழுங்கிவிடும்.

குருதியில் கலந்துள்ள எதிர்ப்பொருள்கள், அழற்சி கொடுக்கும் நுண்ணுயிரிகளையும், அவற்றின் நச்சுப் பொருள்களையுமழிப்பதில் பெரும்பங்கு கொள்கின்றன. சிலவகையான அழற்சிகளில் மேற்கூறிய அணுக்களின் வினைகளே முகாமையானவாகத் திகழ்கின்றன. சிலவற்றில் அணுக்களை விடக், குருதியிலுள்ள வேதியப் பொருள்களே முதன்மையாக விளங்குகின்றன. எனினும் தற்காப்பிற்கு இரண்டுமே தேவையானவை.

அழற்சியின் அறிகுறிகளும் உடம்பிலேற்படும் மாற்றங்களும்:—

வெப்பம், வீக்கம், வலி, செந்நிறம், வினையியலாமை ஆகிய ஐந்தும் அழற்சியினறிகுறிகளென முன்பே கண்டோம். அழற்சியுண்டான விடத்திற்கு மிகுந்த குருதி பாய்வதனுலேயே அவ்விடம் மற்ற இடங்களைவிட வெப்பமாகவும், செந்நிறமாகவும் இருக்கின்றது. வீக்கம், அழற்சி வடிநீர் மிகுதியாகத்தேங்கி நிற்பதாலுண்டாகின்றது. அழற்சி மேற்பட்ட இடத்திலுள்ள வலியுணர் நரம்புகள் அழுத்தப்படுவ

தாலும், அழற்சியின்பொழுதுண்டாகும் சில வேதியங்களாலும் வலியுண்டாகின்றது. வினையியலாமை மிகுந்த வலியினாலேயே. இவை தவிரக் காய்ச்சலும் ஏற்படும். காய்ச்சல் பொதுவாக நிறமேலாத்தாள் வெள்ளணுக்கள் வெளியிடும் காய்ச்சலேற்படுத்தும் வேதியங்களால் உண்டாகின்றது. இவை தவிர வெள்ளணுப் பெருக்கமும் (Leuko cytosis), சிற்சில விடத்துக் குறைப்பும் (Leuko penia) ஏற்படுகின்றன.

திசு மாற்றங்கள் :-

திசுக்களில் இருவகையான மாற்றங்கள் ஏற்படுகின்றன. அவையாவன:- (க) திசுச் சிதைவு, (உ) திசுப்பெருக்கம். அழற்சி கடுமையாகவுள்ளவிடத்துத் திசுச் சிதைவும், அது குறைந்த விடங்களில் திசுப் பெருக்கமும் ஏற்படுகின்றன. ஆதலால் அழற்சியுண்டான இடங்களின் நடுவில் திசுச்சிதைவும், அதைச் சுற்றியுள்ள இடங்களில் திசுப்பெருக்கமும் ஏற்படுகின்றன. அழற்சி கொடுக்கும் நுண்ணுயிரிகளின் நச்சுப் பொருள்களும், அழற்சியால் குருதிக் குழல்களில் ஏற்படும் குருதியுறைவுமே, திசுச் சிதைவுக்கும் இறப்புக்கும் கரணியமாகின்றன. இறந்த திசுக்கள், வெள்ளணுக்கள் வெளியிடும் புரதங்கரை நொதிகளால் தாக்கப்பட்டுக் குழைந்து, கரைந்து சீழாகின்றன, இம் முறையே சீழ்பிடித்தல் (Suppuration) எனப்படும். எல்லா அழற்சிகளிலும் சீழுண்டாவதில்லை. சீழ் உண்டாக, இறந்த திசுக்களும், போதுமான அளவு வெள்ளணுக்களும் புரதங்கரை நொதியும் தேவை. இவையில்லாத அல்லது குறைந்தவிடத்துச் சீழ்பிடிக்காது. எடுத்துக்காட்டாக, பானீர் மென்றோலில் (Serovs membrane) ஏற்படும் அழற்சியில் சீழுண்டாவதில்லை. ஏனெனில் இவணுண்டாகும் வடி நீரில் வெள்ளணுக்கள் குறைந்த அளவிலேயேயுள்ளன. சீழ் பிடிப்பதால்தான் சீழறைகளும், கொப்புளங்களும் உண்டாகின்றன. சீழறைகள் ஆழமான பகுதிகளிலிருந்து வெளியிலுடையும் பொழுது சீழ்வழிகளும் (Sinus), தோலோ, மென்றோலோ அழற்சியால் சிதையும் பொழுது புண்களும் ஏற்படுகின்றன.

பழுது பார்த்தல் :-

சிதைந்த இடங்களில் முதலில் துகள்திசுக்கள் (Granulation tissue) ஏற்படுகின்றன. பின்னர் அவை நார்த்திசுக்களாக (Fibrous

tissue) மாற்றப்படுகின்றன. பழுதுபார்த்தலில் அழற்சி ஏற்பட்ட இடத்தைச் சுற்றிலுமுள்ள நிலப்பொருள்கள் (Ground Substance), நுண் குழல்கள் (Capillaries), நார் அணுக்கள் (Fibro blasts) ஆகியவை பெரும்பங்கு கொள்கின்றன. முடிவாகச் சிதைந்த இடங்களில் தழும்புகள் ஏற்படுகின்றன. கணைய அணுக்கள் போன்றவை அழியும்பொழுது அவ்விடத்து மீண்டும் புதுக் கணைய அணுக்களே ஏற்படுகின்றன. ஆனால் நரம்பு அணுக்கள் போன்றவை அழிங்கால் அவை மீண்டும் உண்டாகா. அவ்விடம் இணை திசுக்களாலேயே நிரப்பப்படுகின்றது. பழுது பார்த்தல் நன்கு நடைபெற உடலில் புரதச் சத்தும், உயிர்ச் சத்து 'இ'யும் வேண்டிய அளவு தேவை. மேலும் சிதைந்த இடத்திற்கு ஓய்வு தேவை. முதிர்ந்த அகவையில் இம்மாற்றங்கள் குறைந்த விரைவிலேயே நடைபெறுகின்றன.

சுருக்கம் :-

அழற்சி கொடுக்கும் பொருள்களால் ஊறுவிளையும் போது, உடம்பின் தற்காப்பமைப்பு (Defence mechanism) தூண்டப்பட்டு, அதன் உறுப்புகளாகிய தற்காப்புப் படை அணுக்களும், வேதியங்களும் அவ்விடத்துக்கு விரைகின்றன. ஆங்கு அவை ஊறு விளைப்பவற்றை அழித்து ஒழிக்கின்றன. அவ்விடத்தைச் சுற்றிலுமுள்ள நிலைத்த அணுக்கள் சிதைந்த இடங்களைப் பழுதுபார்க்கின்றன. இவ்வினையில் தற்காப்பமைப்பு தோல்வியுறும் பொழுது, அதாவது ஊறு விளைப்பவற்றைத் தடுக்க முடியாவிடத்து, ஊறுகள் பரவி உடம்பு நோய் வாய்ப்படுகின்றது. இவ்விடத்து உடம்புக்குப் புறத்துணையான மருத்துவம் தேவைப்படுகின்றது.

முடிவுரை :-

அழற்சியின் சில பகுதிகளுக்கும், சில நுண்ணிய மாற்றங்களுக்கும் இன்னும் கரணியம் தெளிவாக்கப்படவில்லை. அஃதாவது அழற்சி பற்றிய அறிவு இன்னும் முழுமையடையவில்லை. எதிர்கால நோயியல் வல்லுநர்கள் இப்புதிர்களுக்கெல்லாம் விடைகண்டு, அழற்சி பற்றிய முழு அறிவையும் அறிவிப்பார்களாக ! O

**'நூருசிரியம்' அடுத்த இதழில் தொடங்குகிறது.**

# கட்சி அரசியல்

மீனவன்.

கட்சி அரசியல் நாணயம் அற்றவர்
கடைசிப் புகல்இடமாம் – சூழ்ச்சி
காட்டும் புதிர் மடமாம்!
வெட்கும் பிழைகளை நாணு மலேபுரி
விலைமகள் கலைத்திறமாம் – உண்மை
வீழ்த்தும் கொலைக்களமாம்.

கலப்பொய் திருடு பணத்தொடு தேர்தல்
களத்திடை நின்றிடுவார் – பொய்மைக்
கயவரும் வென்றிடுவார்!
வலப்புறம் இடப்புறம் என்னும் திறத்தவர்
வாய்மை பிழைப்பதில்லை – நல்லோர்
வழியும் தழைப்பதில்லை.

வறியவர் தங்கட் குழைத்திடு வோமென்று
வாய்ப்புகள் பெற்றிடுவார் – பதவி
வண்டியில் தொற்றிடுவார்.
குறியாகச் செல்வர்க் குழைப்போம் என்றவர்
கொள்ளைப் பணம்பறிப்பார் – மாடி
குன்றெனத் தளம்பதிப்பார்.

முன்னர் உரைத்ததைப் பின்னர் மறுத்திடு
முரண்கள் விதைப்பதுண்டு – வேறு
முத்திரை பதிப்பதுண்டு.
கன்னல் இனிப்பு துவர்ப்பெனக் கூறிடும்
கைகாரப் பித்தரிவர் – சொல்லைக்
காற்றிடும் எத்தரிவர்.

கொள்கை முழக்கெனுங் கள்குடித் தாடுவார்
குப்புற வீழ்ந்திடுவார் – தடை
குறுக்கிடின் தாழ்ந்திடுவார்!
மெள்ள வயிற்றை நிரப்பிடு கொள்கை
மேவுபச் சோந்தி யொப்பார் – பகைவன்
மெல்லடி வருடி நிற்பார்.

# வாழ்க்கை வயல் அமைப்பேன்!

இமயத்தமிழன்.

ஒருவழி நடக்க ஓர்ந்து துணிந்தேன்!
பெருவழி எனினும் பெயர்த்துத் திரும்பேன்!
இடையிடை எழுமலை இடர்விளை ஆறு
தடையென வந்தால் தடுத்துச் சாய்ப்பேன்!
நடையினைத் தளர்த்தேன்! நலிந்தோர் வாழ்க்கைக்கு
விடையொன்று காண்பேன்! வீணில் திரும்பேன்!
பகைவர் நெஞ்சிற் பதியும் வாள்போல்
பதியும் முட்குப் பணிந்தெழ மாட்டேன்!
புதற்கண் மறைந்து புலிபாய்ந் தாலும்
புற்றினிற் பாம்பு புடைத்தெழுந் தாலும்
வாட்கைக் கொள்வேன்; வழியே செல்வேன்;
வேட்கை தணியேன்; வேறிடம் திரும்பேன்!
தூய்மலர் நீரில் துலங்குதற் போல,
தனிமகள் ஒருத்தி தோன்றிநின் ருலும்
விருப்பம் கொள்ளேன்; விழியினின் றவளை,
விலக்கி முன்படர் வழியில் நடப்பேன்!
இயற்கை யன்னை இயற்றும் எழிலை
வியந்து பாரேன்; விரைந்து செல்வேன்!
ஆயிரங் கடலும் அடுத்தடுத் தெதிர்ப்பினும்
அயர்ந்திட மாட்டேன்! அல்லற் கஞ்சேன்!
கட்டிப் பொன்விளை கனிதேன் நிலத்தில்
முட்புதர் போல முளைத்துச் செழித்து
வளர்ந்த தீமையை வெட்டிப் புதைத்து
வளந்தரு வாழ்க்கை வயலமைப் பேனே! ○

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

இவ்வழி வந்துநு ழைபவர் மக்களை
எவ்வழி கொண்டு வைப்பார்? – ஆட்சி
இழிவழி மண்ட நிற்பார்!
செவ்வழி காண்குறப் புதுமுறை அரசியல்
செய்வது நமது கடன் – மக்கள்
சீர்ப்படல் வேண்டும் உடன்! ○

# மறைந்துவரும் தமிழ்ச் சொற்கள்

சோம்பல், அடிமை, அறியாமை யால்தமிழை
ஓம்பல் குறைவால் உலகவழக் கற்றொழிந்த
பைந்தமிழ்ச் சொற்கள் பலகோடி! ஈங்கதனால்
நைந்த தமிழர் நலிவு பலகோடி!
இன்று விழித்தோம்; இனியேனும் செந்தமிழை
நன்றாகப் பேணிவர நாம் முனைவோம்; நாற்புறமும்
சென்று மறைந்து வரும் செந்தமிழ்சேர் சொற்களை
ஒன்று திரட்டி, உரியபொருள் ஆய்ந்தெழுதி
இப்பகுதிக் கேவிடுக்க; ஏற்ற பயின்றிடுக;
செப்பம் மொழிக்குச் சிறப்பு.

கீழுள்ள சொற்களை தொகுத்தனுப்பியவர்.

அ. தெ. இரகோத்தமன், அறங்கண்டநல்லூர். (தெ.ஆ)

வெளா-வளா-உழவின்போது வளைத்து ஓட்டும் இடம்.

தாக்குவாரி-மழைக்காலங்களில் ஓடிவரும் நீர் இணைந்து நிற்கும் பயிரிடப்படாத நிலப்பகுதி.

கண்ணாறு-வரப்புகளுக்கு நடுவே நீர் ஓடும் கால்வாய்.

இரண்டாங் கொம்பு-விதைப்பதற்காக இரண்டாம் நாளாக ஊற வைத்த நெல்.

மூன்றாங் கொம்பு-விதைப்பதற்காக மூன்றாம் நாளாக ஊறவைத்துள்ள நெல்

குண்டிக்கால், தளை-வரப்புகளுக்குள்ள பயிரிடும் நிலம்.

பையலாள்- பதினெட்டிலிருந்து இருப்பத்திரண்டு அகவைக்குட்பட்ட மாந்தன். கழனி-நன்செய் நிலம்.

கொல்லை-புன்செய் நிலம்.

கிண்ணாரம், எக்காளிப்பு-மிகுந்த மகிழ்ச்சி.

தேர்த்திரும்புதல்-விதைக்கப்பட்ட நெல் நிலத்தில் வேரூன்றும் நிகழ்ச்சி. நொள்ளை-நீரில் உறையும் ஒரு வகைப் பாம்பு.

கொட்டடி-அறை. சப்பாரை-தேங்கியுள்ள நீரில் வளரும் புல்.

வாங்கி விடுதல்-ஆழமாக்கி விடுதல்.

தப்படி-நடந்து செல்லுங்கால் இருகால்களுக்கும் இடையிலுள்ளஅளவு.

ச்சுப்பயிர்-நன்றாக வளராததும், வளர்ந்துள்ள பயிர்களுக்குக் களை போன்றதுமான பயிர்.

கம்பஞ்சீட்டை-செழிப்பாக வளராத சிறு கம்பங் கதிர்.

சாக்கு-பொய்க்கரணியம். சுறுக்கா-விரைவாக.

கவைக்கோல்-முட்செடிகளையும், முள்ளுள்ள மரங்களையும் வெட்டவும், தூக்கிச்செல்லவும் பயன் படுத்தும் 'Y' வடிவக்கோல்.

தகாப்பேச்சுக்காரன்-பொய்ப்பேச்சுக்காரன், ஏமாற்றுவோன்

காலாமாலைக்காரன்-நிலையற்ற பேச்சுப் பேசுவோன்; ஏமாற்றுவோன்;

மப்பு-முகில், மழைமூட்டம்.

(மடையைத்)தாங்குதல்-(மடையை) மூடுதல் (அ) கட்டுதல்.

மல்லாக்கா-திரும்பவும், மீண்டும்.

ஒன்றுக்குத்தலாக-அரைகுறையாக இடியவைத்தல், திமிராக.

உழக்கோல்-உழவின்போது மாடுகளை ஓட்ட பயன்படும் சிறுகோல்.

சிறுவாணம்-கொஞ்சங் கொஞ்சமாகச் சேர்த்து வைக்கும் பணம் (Savings).

(வானம்) வக்காளித்தல்-(வானம்) முகிற் கூட்டமின்றி நன்கு வெளுத்திருத்தல். கசங்கு-ஈச்சவோலையில் நடு நரம்பு.

வளிச்சல்-கூரையைக் கீழுள்ள மரக்கழிகளுடன் சேர்த்துக் கட்டப் பயன்படுத்தும் மெல்லியகோல்.

தண்டை-கூரையின் ஓரங்களில் உட்பக்கமாகக் கட்டப்படும் உருளையான நெற்றுள்.

மேட்டு வளைவு-கூரையின் உச்சியில் மேடாக வளைந்து காணப்படும் பகுதி.

கச்சிப்போதல்-உப்பிட்ட உணவுப் பொருள்களைச் செம்பு, பித்தளை போன்ற மாழை ஏனங்களில் வைத்திருப்பதால் ஏற்படும் இயைபு மாற்றம் (Chemical Change)

வாரை-கூரையின் கீழுள்ள மரக்கழிகள்.

சேர், உறை-கூலங்களைக் கொட்டி வைக்கும் கூடு.

தட்டு-கதிர் அறுத்துவிட்ட கம்பு, சோளம் போன்ற பயிர்கள்.

சம்பு-பனை, தென்னை மட்டைகளாற் செய்யப்பட்ட மழைக் கவிப்பு.

குச்சுக்கரண்டி-மிகச் சிறிய மாழை அகப்பை.

பாய்த்தூக்கு-பாய்த்தலையணை வைக்கும் உறி.

மணை-உட்காரும் பலகை.

(வைக்கோற்)புரி-வைக்கோலை முறுக்கிச் செய்யப்பட்ட கயிறு.

ஊராகாலி-ஊராரின் மாடுகளை மேய்த்துவரும் ஆள்.

கிண்டி-எச்சிற் படுத்தி உண்ணும் கிண்ணம்

கம்புட்டுக்காய்-பருவமல்லாத காலத்தில் காய்க்கும் காய்.

கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர்: ச. கணேசன்.
வேலாண்டிபாளையம், கோவை-11.

ஒசும்பல்-ஈரக்கசிவு; வாய்காலின் இருபுறமும் தோன்றும் நீர்க்கசிவு.
கெடும்பை-கெடுதல்; துன்பம். கைம்மா-நொறுங்க வெட்டுதல்.
கொடாப்பு-கோழிகளைப்போட்டு மூடும் பெரிய கூடை.
கோளங்கட்டை-செங்கல் காளவாயில் உருகிக் கெட்ட செங்கல்.
கேளாங்கட்டை - ஈரமரத்தில் படியும் வெண்படிவு.
கோப்பு - வழி, நிலை (செய்கிற கோப்பு-செய்கிற நிலை)
சடைவு–சோர்வு, சலிப்பு.
சிட்டம்–இரும்பு உருகும் உலையில் வெளிவரும் கழிவு (Slag)
தோது–வசதி, கையாள எளிதான.
பாந்து–முடிவுறாத கட்டிடத்தில் ஓட்டுக்கும் சுவற்றுக்கும் இடையே உள்ள சந்து.
மம்மாணி–ஏராளம். மக்கிரி-மூங்கிலால் ஆன கூடை, மண் வழிக்கப பயன்படுவது.
மசை-பைத்தியம்; வெறி; முரட்டு, அறிவற்ற, கண்மூடித்தனமான.
மெத்துதல்–தட்டிச் சமன் படுத்துதல்.
மொத்துதல்–முதுகில் அடிப்பது.
நெரித்தல்–மாவு அரைக்கும் பொறியில் அல்லது இராகிக்கல்லில் கூலத்தை அரைத்தல்-(சிறுசிறு தொளைகளின் வழி பிசைந்த மாவைப் பிழிதல்)
நிற்பாட்டல்–நிற்க வைத்தல் (நிற்பாடு–ஒ. நோ; செயற்பாடு)
வேனம்–தின்பண்டம் (சிறுவர் வழக்கு) வேசரவு-வெறி; ஆவேசம்.
வெட்டாப்பு-மழைவிட்டு வெளுத்தல்; மழை நிற்றல்.
முட்டுவழி-தொடக்கத் துணைச் செலவுகள், முதலோடு கூடிய துணை முதல்.

கீழ்க்கண்ட சொற்களைத் தொகுத்தனுப்பியவர்.
- குறிஞ்சிவேந்தன், கோவை-16.

கொசரம்-அதற்கொசரம்-அதற்காக. கூழை-குட்டை
கூமாச்சி-மிகக் கூர்மை. இடங்கோடு-இடைஞ்சல்.
மடமாணியம்-மிக மிகுதி. முசுவு-சுறுசுறுப்பு (Busy)
கம்மி-குறைவு. ஒந்தரை-ஒருபக்கம் சாய்ந்த, குறைப்பட்ட

கொனவு-நுனி. கரிசனம்-பேணுதல்; அக்கறை, தடம்-வழி.

வாது-கொம்பு. போலொத்தவர்-போன்றவர்.

வாங்கு-பிரி; பிள; நீக்கு. (மட்டைவாங்கு-மட்டை நீக்கு)

தொண்ணை-பருமன். வாட்டி-முறை. (இந்தவாட்டி-இம்முறை)

பாங்கு-பாதுகாப்பு. முடுக்கு-ஒட்டு; துரத்து. அள்ளை-பக்கம்.

மகுட்டு-வழுக்கு, சரிந்து விடுதல்.

சிலாக்கு-விறகின் சிறுபகுதி; எளிதில் கையில் பாயக்கூடிய மரத்தின் சிறு பகுதி.

மேவு-ஆடு. மாடு போன்றவற்றின் (தழை, வைக்கோல் போன்ற) உணவைக் குறிப்பது.

சன்னம்-மெல்லியதாக இருத்தல் (அதிக வலுவற்று இருத்தல்)

அணத்துதல்-நோயின் மிகுதியாலோ,களைப்பின் மிகுதியாலோ முனகிக் கொண்டிருப்பது.

வில்லங்கம்-துன்பம்: தொல்லை, இடர்ப்பாடு. ஒரம்பரை-விருந்து.

பின் வரும் சொற்களைத் தொகுத்தனுப்பியவர்,
விழிஞை. எழிலரசன், சிற்றூர் சீரமைப்பாளர். கப்பியாம்புலியூர்.

உள்ளாழி-வண்டியில் அச்சு சுழல்வதற்காகப் பொருத்தப்படும் இரும்பு ஆழி. உருட்டு-வீடுகட்ட உதவும் பெரிய கழி.

கழுவாமனை-பயனற்றவன் (ஏசுதல்)

கலசம்-நாற்று முடிகள் 20கொண்டது. குசுமான்-சினன்ச் சின்ன மீன்.

ஒண்டி-தனிமை, ஏர்க்கொழு பொருத்த உதவும் கருவி.

சொள்ளை-சொடுக்கு விழுந்தது.

சிட்டம்-விளக்குத்திரியின் கரிந்தபகுதி-திரித்த பஞ்சு.

நன்னி-மிகுதியான சுருக்கம் விழுந்த மணிலாப் பயிறு,

வயிறு வாய்க்கால் - நாற்றங்காலில் நீர்வடியச் செய்யும் சிறிய வாய்க்கால்.

வட்டை-கிணற்றில் கல்கட்ட அடியில் இடப்படும் மரவட்டம்.

மோட்டை-ஒரு வயலிலிருந்து கீழ் வயலுக்கு நீர் கசியும் வளை.

—:0:—

# பாட்டரங்கம்

ஆர்விடுத்தா லென்ன? இங் கார்போற்றி ஞலென்ன ?
சீர்வழுவா யாப்பும் செழித்த தனித்தமிழும்
எந்தமிழர்க் குள்ளொளியை ஏற்றும் உயர்கருத்தும்
முந்தியிங் கில்லா முழுச்சிறப்பும் கொண்டு, அடிமைப்
பூட்டறுக்க வல்ல புதுமை ஒளிர் பாட்டே
பாட்டரங்கம் ஏறுகின்ற பாட்டு !

---

கூழுக்கெழுதாதீர் ! -தமிழ்நெஞ்சன்.

தொடுக்கும் நறும்பாத் துணரில் மகிழ்ந்து
கிடக்கும் புலவர்காள் ! கெஞ்சியொன்று கேட்கின்றேன் !

ஏதோ எழுதி எழுத்தால் வயிற்றினைத்
தோதாய் நிரப்பி நலம்பெறுவோம் என்றெண்ணும்

பொய்மை மனத்தால் புனையாதிர் தீம்பாடல்
எய்தும் பெருமை இதுவன்றே! இன்றிலையேல்

நாளை உலகம் நமைப்பழிக்கும் ! நம்மிறுதி
வேளை வரும்பொழுது வெந்தழுது என்னபயன் ?

முன்னைப் பெருமைகளில் மூழ்கிக் கிடக்காமல்
இன்னும் பெருமைகளை ஏற்றிடுவோம் ! நம்மிடையே

மண்டிக் கிடக்கும் மயல்மிக்க பொய்மைகளைச்
சுண்டி யிழுத்துச் சுடரில் பொசுக்கிவிடத்

தேங்கிக் கிடக்கும் தினவெடுத்த எண்ணங்கள்
வீங்கிப் புடைத்து வெடித்தெழுந்து செந்தமிழ்ச்

சொல்லாய்ச் சுடுகணையாய்ச் சுட்டெரிக்கும் செந்தீயாய்ப்
பொல்லாப் புலியாய்ப் புறப்பட்டுப் புன்மையினைக்

கண்ட பொழுது கனன்று கடிந்தெதிர்த்தே
அண்ட வெளியெங்கும் ஆடித் திரிந்துவிட்டு

நல்லோர் மணமென்னும் நன்மலரில் தங்கியபின்
சொல்லே ருழவர் சுவைக்கும் பொருளாகி

ஏழை எளியோர் இடுக்கண் களைவதற்கு
வாழும் கருவியென வாழ்ந்திருந்து காலத்தை

வென்று புகழ்பரப்பி வேற்றூர் பலர்போற்ற
நின்று நிலவ நெடும்பாடல் செய்வீர்நீர்!

வீசும் இறைப்புகழும் மாந்தர் தனிப்புகழும்
பேசும் பறையாய்ப் பெரும்பாடல் தீட்டாதீர்!

காலத்தை வீணாக்கிக் கற்பனையைச் சேறாக்கி
ஓலத்தைச் சொல்லாக்கி ஒப்பற்ற செந்தமிழைப்

பாழுக் கிறைக்காதீர்! பாழ்மனத்தின் உந்துதலால்
கூழுக் கெழுதாதீர்! கும்பிட்டுச் சொல்லுகிறேன்!

எங்கும் சமஉரிமை இன்பவொளி ஏற்றுதற்குப்
பொங்கும் உயர்பா புறப்படட்டும்! ஏழைகளின்

துன்பம் துடைப்பதற்குத் தூயவழி கூறட்டும்!
இன்பம் பெருக்கும் இனியவழி சொல்லட்டும்!

எண்ணுதற்கும் பேசி எழுதுதற்கும் இன்றுள்ள
கண்ணனைய வாய்ப்பைக் கணக்கிட்டுப் பாரீரோ!

ஆக்கல் அழித்தல் அனைத்துமே பாப்பெருமை!
ஊக்கம் தளராமல் உள்ளம் கலையாமல்

வாய்ச்சொல், மனமொன்றி, வாய்மை நெறிநின்று
தேய்வில் அறிவுத் தெளிவோடு தீம்பாடல்

தீட்டுங்கள்! பாட்டுத் திறத்தாலிவ் வையகத்தை
ஊட்டி வளர்ப்போம் உயிர்!

## எண்ணற்க இந்தியை!

கலைமாறன், கூடலூர்.

இணையிலாப் பீடுடன் எங்குஞ் சிறக்க
அணை தமிழ் காக்க விழையின் - திணைத்துணையும்
எண்ணற்க இந்தியை; எண்ணிவாழ் வீராயின்
உண்ணற்க சோற்றை உவந்து!

மாற்றார் மொழிநீக்கி மன்னு தமிழ்ப் பேணும்
ஆற்றலினு மாற்றல் பிறிதுண்டோ - ஊற்றமுள
செந்தமிழா! அஞ்சாதே!! இந்திதன் சீரழிக்க
முந்தை நெறிநில் முயன்று!

மாற்றான் மொழிக்கு மடியேந்தி மானமின்றிக்
கூற்றும் நிலையிலே கூடி நின்று - தேற்றும்
விழியனைய நந்தமிழ் வேண்டார்,உலகில்
அழியினும் வாழினும் என்?

வாழி வளர்தமிழ் வாழியர் தமிழவர்
வாழி நன்னெறி வாழிய தமிழகம்
வீழ்க புன்னெறி விளங்குக நல்லறம்
வீழ்க வடமொழி! விளங்குக தென்மொழி!

## திரண்டு வாரீர்!

ம. இராயப்பன். நெய்வேலி-1.

நாயினைப்போல் வால்குழைத்தே ஓடும் வீணர்!
நந்தமிழைப் பழித்திட்டே வடக்கின் நாற்றப்
பேய்மொழியாம் இந்தியினைப் புகழ்ந்தார்; அந்தப்
புல்லர்களின் செயல்கண்டு கொதிக்கும் நெஞ்சம்!
தாயினுக்கே ஊறிழைக்கும் கயவர்! என்றும்
தந்நலமே பெரிதென்று பேணும் புல்லர்!
சேயினையும் புகழினுக்காய் அழிக்கும் மாக்கள்!
தேட்டினுக்காய் மனைவியையும் விற்பர் தாமோ?

தமிழனென்றே முழக்கிட்டார்; பதவி ஏற்றார்;
தாய்மொழியைக் காப்பார்என்(று) இருந்தோம்; இந்நாள்
உமிழ்ந்திட்ட எச்சிலினை உண்ணு தற்கோ
ஓடிப்போய் வடவன்கால் வீழு கின்றார்?
அமிழ்தூறும் தமிழிருக்கப் பள்ளி தன்னில்
அயன்மொழியாம் 'இந்தியினைக் கற்பீர்!' என்றார்;
தமிழன்னை முலையுண்ட வேங்கை காள்நம்!
தாய்மொழியைக் காத்திடவே திரண்டு வாரீர்!

## தமிழைக் காப்பாய்!

தமிழ்நாட்டு ஒற்றன், வத்திராயிருப்பு.

தமிழாலே தான்வாழ்ந்து தமிழ்க்கொலையே புரிந்துதிரி
தகவிலாளர்
தமிழ்நாட்டில் தடையின்றித் தலைதூக்கி நடைபோடும்
தன்மை மாற்றித்
தமிழாட்சி நிலைநிறுத்தித் தவறிழைக்கும் தருக்கரினைத்
தாக்கல் வேண்டும்!
தமிழ்மகனே தலைநிமிர்வாய் தளராநல் நடையிடுவாய்
தமிழைக் காப்பாய்!

இன்றமிழா நீயெழுந்தால் எம்மொழிதான் வரமுடியும்
ஏன்தளர்ந்தாய் ?
கன்னலெனத் தமிழிருக்கக் கைப்புமிகு வேப்பங்காய்
கடிப்பார் போல
இன்னல்மிகு மிந்திமொழி யிந்நாட்டில் வந்தாள
ஏற்றுர் புல்லர்!
என்வழியும் நந்தமிழ்க்(கு) ஊறிழைப்போர் குரல்வளையை
நெரிப்பாய் இன்றே!

தலை உருளும் ! கோம்பை - தி. காசியப்பன்.

என்னை யிகழ்ந்தோன் எளியனே ஆனாலும்
என்னென்றும் கேளேன்நான்! எள்ளத் துணைவருந்தேன்;
முன்னை முருகொளியே! மூவா முதன்மொழியே!
இன்பச் சுனையே! இணைந்தா ளிதழமிழ்தே!
கன்னற் பிழிவே! கனிச்சுவையே நல்லுலகத்
தென்னர் வளர்த்திட்ட செம்மணப் பூம்பொழிலே!
அன்னைத் தமிழே! அறவோர்க் குறுவேலே!
உன்னைப் பழிப்போன், உலகிற் கொளிவழங்கு
வன்கதி ரன்ன வலிமிக்கோன் என்றாலும்,
என்னென் றெழுந்தார்ப்பேன் ஏறென்னச் சீறிடுவேன்;
அன்றேன் தலையு மடுத்தநொடி மண்மீதில்
உன்முன் விழுமே உருண்டு!

நில்லேன் ! அஞ்சேன் ! கா. சு. இரகுமணி, சென்னை-10.

அறங்காக்கும் சான்றோர்கள் மீதில் ஆணை!
அன்பூட்டும் அன்னையர்கள் மீதில் ஆணை!
மறங்காக்கும் தமிழ்க்குடிகள் மீதில் ஆணை!
மதியூட்டும் ஆசிரியர் மீதில் ஆணை!
உரமுற்ற தடந்தோள்கள் உள்ள மட்டும்
ஒருதுளியாம் குருதியென்பால் உள்ள மட்டும்
திருமகளாம் தமிழுக்குத் தீங்கி ழைக்கும்
தீயவரின் தலைகொய்வேன்! நில்லேன்! அஞ்சேன்!

—:o:—